# சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு

# செயற்பாட்டு அறிக்கை 2016

முதலாவது மாடி
செத்சிறிபாய இரண்டாவது கட்டம்
பத்தரமுல்லை
தொலைபேசி இல. : 011-2887349-51
தொலைநகல்: 011 – 2 187007
தொலைமடல் : msssec@sltnet.lk

# பக்கம்


| தலைப்பு | | பக்க இல. |
|---|---|---|
| அறிமுகம் | | i-iii |
| அமைச்சின் நிறுவகம்சார் அமைப்பு | | iv |
| 01. | உளவளத்துணைப் பிரிவு | 2-8 |
| 01.1 | தேசிய உளவளத்துணை நிலையத்தின் வகிபாகம். | 2 |
| 01.2 | 2016 ஆம் ஆண்டில் இடம்பெற்ற செயற்பாடுகள் | 2 |
| 01.3 | நிதிசார் மற்றும் பௌதிக முன்னேற்றம் | 7-8 |
| 02. | அங்கவீனமுற்ற நபர்களுக்கான செயலகம் மற்றும் தேசிய சபை | 9-14 |
| 02.1 | அறிமுகம் | 9 |
| 02.2 | 2016 ஆம் ஆண்டில் இடம்பெற்ற செயற்பாடுகள் | 9 |
| 02.3 | நிதிசார் மற்றும் பௌதிக முன்னேற்றம் | 10-13 |
| 02.4 | விசேட செயற்பாடுகள் | 14 |
| 03. | தனியொருவரினைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டம் | 15.16 |
| 03.1 | அறிமுகம் | 15 |
| 03.2 | பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றம் | 16 |
| 04. | கிராமிய அபிவிருத்திப் பிரிவு | 17-25 |
| 04.1 | சமுர்த்தி மாதிரிக் கிராம நிகழ்ச்சித் திட்டம் | 17 |
| 04.2 | வறுமையினைத் தணிப்பது தொடர்பில் SAARC நிகழ்ச்சித் திட்டம் | 24-25 |
| 05. | சமூக சேவைகள் திணைக்களம் | 26-40 |
| 05.1 | அறிமுகம் | 26 |
| 05.2 | நிதிசார் மற்றும் பௌதிக முன்னேற்றம் | 27-40 |
| 06. | வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் | 41-56 |
| 06.1 | அறிமுகம் | 41 |
| 06.2 | அமுற்படுத்தப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | 41 |
| 06.3 | கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம் | 51-56 |
| 07. | முதியோர்களுக்கான தேசிய செயலகம் மற்றும் தேசிய சபை | 57-60 |
| 07.1 | அறிமுகம் | 57 |
| 07.2 | நிதிசார் மற்றும் பௌதிக முன்னேற்றம் | 58-60 |

| | | |
|---|---|---|
| **08.தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம்** | | **61-72** |
| 08.1 | அறிமுகம் | 61 |
| 08.2 | நிதிசார் மற்றும் பௌதிக முன்னேற்றம் | 62-72 |
| **09. இலங்கைச் சமூகப் பாதுகாப்புச் சபை** | | **73-77** |
| 09.1 | அறிமுகம் | 73 |
| 09.2. | நிதிசார் மற்றும் பௌதிக முன்னேற்றம் | 74-77 |
| **10. ஏனைய செயற்பாடுகள்** | | **78-89** |

# அறிமுகம்

2015.09.21 ஆந் திகதி வெளியிடப்பட்ட இலங்கை ஜனநாயகச் சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ஓரங்கட்டப்பட்டு பின்தங்கிய நிலையின் கீழ் வாழ்ந்து வரும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தி, வினைத்திறன், பலம், விளைதிறன், சிநேகபூர்வமான சூழல் மற்றும் பொருளாதார சேவையினை வழங்கும் பணியினைத் தொலைநோக்காகக் கொண்டு இவ்வமைச்சு செயற்பட்டு வருகின்றது.

“2030 ஆம் ஆண்டளவில் வறுமையற்ற, உரிமைகள் காக்கப்பட்ட இலங்கையொன்று” என்ற தொலைநோக்கின் கீழ், பிரதானமாக இலக்கிடப்பட்ட 04 குழுக்களை மையமாகக் கெண்டு இவ்வமைச்சினால் மிகப் பிரமாண்டமான சமூகப் பணியொன்று நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இவ்வாறு சேவைகளைப் பெற்று வரும் பிரதானமாக இலக்கிடப்பட்ட குழுக்களாக,

- அங்கவீனமுற்ற நபர்கள் (மொத்த சனத்தொகையில் 8.7%)
- 60 வயதிற்கு மேற்பட்ட மூத்த பிரஜைகள் (மொத்த சனத்தொகையில் 12.4%)
- தனியொருவரினைத் தலைவராகக் கொண்ட குடும்பங்கள் (மொத்த குடும்ப எண்ணிக்கையில் 11.8%)
- குறைந்த வருமானத்தினைக் கொண்ட குடும்பங்கள் (மொத்த சனத்தொகையில் 6.7%)

இக்குழுக்களை இலக்காகக் கொண்டு அமைச்சுக்கு உரித்தான இணை நிறுவனங்களான திணைக்களம்/நிறுவனம் மற்றும் பிரிவுகளினூடாக சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கு உன்னத பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம், பொருளாதார அபிவிருத்தி முன்னெடுப்பு மேம்பாட்டினை நோக்கி, வறுமையினை ஒழித்து, சமூக நியாயத்தினை உறுதிப்படுத்தி தேசியக் கொள்கையினை விதிப்பதற்கு வலுவினை வழங்கும் மிகப் பிரமாண்டமான அபிவிருத்தி பணியினை முன்னெடுத்து வருகின்றது.

அங்கவீனமுற்ற நபர்களின் வாழ்க்கைத் தொழில் திறன்களை மேம்படுத்துதல், அவர்களை சுதந்திரமான பிரஜைகளாக்குதல், விசேட தேவைகளைக் கொண்ட பிள்ளைகளின் மேம்பாட்டிற்கு முற்கூட்டியே தலையிடுதல் உட்பட்ட நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு சமூக சேவைகள் திணைக்களம் தனது பணிகளை முன்னெடுத்து வருகின்றது.

அதே போல சமூகத்தில் வாழும் பாதகத்திற்கு உட்பட்டுள்ள நபர்களுக்கு சிநேகபூர்வமான சூழலொன்றை மலரச் செய்வதற்காக அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளை மேம்படுத்துதல் மற்றும் அவர்களின் நலன்புரியினை உள்ளடக்கி நிவாரணங்களைச் செய்து கொடுத்தல் அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின் கடமைப்பொறுப்பாகும்.

இலங்கை வாழ் முதியோர் சமுதாயத்தின் சுதந்திரம், பாதுகாப்பு, ஆத்ம திருப்தி, பங்களிப்பு மற்றும் கௌரவத்தினை ஏற்படுத்திக் கொள்ளுவதற்கான பல்வேறான நிகழ்ச்சித் திட்டங்களினூடாக அவர்களை ஊக்குவித்தல் மற்றும் முதியோர்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான பங்களிப்பு வழங்கப்பட்டு வருவது முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் மூலமாகும்.

சமூகப் பணி விடயத்தினை அடிப்படையாகக் கொண்டு நாட்டிற்குத் தேவையான சமூகப் பணி மற்றும் சமூக நலன் தொழில்வாண்மையாளர்களை உருவாக்குவதற்கு சமூகப் பணி தொடர்பான கல்வியினை வழங்கி வரும் முன்னுரிமை நிறுவனமாவது, தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகமாகும்.

அதேபோல பல்வேறான காரணங்களை அடிப்படையாகக் கொண்டு தனிப்பெற்றாராக்கப்படும் இலங்கை வாழ் பிரஜைகளுக்கு அவர்கள் முகங்கொடுக்கும் பொருளாதாரச் சிக்கல்களுக்கு உதவிக்கரம் வழங்குவதற்கென தனியொருவரினைத் தலைவராகக் கொண்ட குடும்பங்ளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம் இவ்வமைச்சின் கீழ் அமுற்படுத்தப்படுகின்றது.

அதேபோல சமுதாயத்தினை வலுவூட்டும் நிலைபேறான கிராமிய அபிவிருத்தியொன்றுக்கான அவர்களின் திடகாத்திரமான பங்களிப்பினை வழங்கும் நீண்டகால அனுபவத்துடன்கூடிய நிறுவனமொன்றாக கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவகம் தனது பணியினை நிறைவேற்றி வருகின்றது.

அரசின் ஓய்வூதியம் கிடைக்கப் பெறாத சுய தொழில்களில் ஈடுபட்டோர், முதியோர்கள், பாதகத்திற்குட்பட்ட நபர்கள், தனிப்பெற்றார்கள், வெளிநாட்டுச் சேவைகளில் ஈடுபட்டோர், கலைஞர்கள் போன்ற சகல சேவைகளிலும் ஈடுபட்டுள்ளோர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பயன்கள் அமுற்படுத்தப்பட்டு வருவது இலங்கைச் சமூகப் பாதுகாப்புச் சபையினாலாகும்.

இவ்வாறான வகையில் சமூகத்தில் வாழும் வறுமைக்குட்பட்டவர்கள், முதியோர்கள், தனிப் பெற்றார்கள், போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் மற்றும் அநாதரவாக்கப்பட்டவர்களுக்கு சமூக, பொருளாதார ரீதியில் திடமான பங்களிப்பொன்று இவ்வமைச்சினூடாக வழங்கப்படுகின்றது. அதன் பிரகாரம் நாட்டின் அபிவிருத்திக்கு உதவும் அமைச்சொன்றான இவ்வமைச்சுக்கு உரித்தான நிறுவனங்கள்/திணைக்களங்கள்/பிரிவுகளினூடாக அமுற்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் 2016 ஆகஸ்டு மாதம் 31 ஆந் திகதி வரையான முன்னேற்றம் “சாதனைகள்” என்ற நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**பிரதான பணிகள் மற்றும் செயற்பாடுகள்**

- சமூக வலுவூட்டுதல், நலன்புரி விடயங்கள், அமைச்சுக்கு உரித்தான திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவகங்களின் விடயங்களுக்கான கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் திட்டமிடுதல் மற்றும் மதிப்பிடுதல்.
- கிராமிய மக்கள் வாழ்க்கையினை வலுவூட்டுவதற்குத் திட்டங்களை வலுவூட்டுவதற்கான மூலோபாயங்களை அடையாளங் காணுதல் மற்றும் அவற்றினை அமுற்படுத்துவதற்கு நிதியுதவிகளை வழங்குதல்.
- கிராமிய மற்றும் பிரதேசப் பொருளாதார அபிவிருத்திக் கொள்கைகளைத் திட்டமிடுதல்.
- கிராமப் புறங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.
- கிராம எழுச்சி நிகழ்ச்சித் திட்டத்தினை அமுற்படுத்துதல்.
- விசேட தேவைகளைக் கொண்ட நபர்களின் பலவீனங்களை அடையாளங் காணுதல் மற்றும் புனர்வாழ்வினை முன்னெடுத்தல்.
- பொதுசன உதவிப் பிரேரணைத் திட்டத்தினை மீளாய்வு செய்தல், மீளமைத்தல் மற்றும் சிறந்த புதிய சீர்திருத்தங்களை அடையாளக் காணுதல்.
- என்புருக்கிநோய், சிறுநீரக நோய், தொழுநோய், புற்றுநோய் மற்றும் தலசீமிய நோயாளர்களுக்கும் மற்றும் அவர்களிற் தங்கியிருப்போர்களுக்கும் உதவிகளை வழங்குதல்.
- குடும்ப உளவத்துணைச் சேவைகளை அமுற்படுத்துதல்.

- அங்கவீனமுற்ற நபர்களுக்குத் தொழிற் பயிற்சியினை வழங்குவதற்கும் மற்றும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் தேவையான உத்திகளைச் செய்தல்.

- அங்கவீனமுற்ற நபர்களுக்கு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை அமுற்படுத்துதல்,

- முதியோர்களைப் பாதுகாத்தல், சமூக அபிவிருத்திப் பணியில் முதியோர்களின் பங்களிப்பினை மேம்படுத்துதல் மற்றும் மூத்த பிரஜைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

**சட்டங்கள்**

- வேலையற்று வெட்டியாகத் திரிபவர்களுக்கான சட்டம் (1841 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க)
- நிவர்தன வீடமைப்புச் சட்டம் (1907 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க)
- வறுமை நீதிச் சட்டம் (1939 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க)
- 1947 செப்ரெம்பர் 21 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலினூடாக சமூக சேவைகள் திணைக்களம் 1948 பெப்ரவரி 01 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.
- வறுமை நிவாரணச் சட்டம் (1985 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க)
- தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகச் சட்டம் (1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க)
- விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியச் சட்டம் (1992 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க)
- சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டம் (1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க)
- 2003 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சட்டத்தினூடாக திருத்தப்பட்ட 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டம்.
- 2011 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க சட்டத்தினூடாகத் திருத்தப்பட்ட 2000 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க முதியோர்களின் உரிமைகளைப பாதுகாக்கும் சட்டம்.
- வாழ்வின் எழுச்சிச் சட்டம் (2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க)

# அமைச்சின் நிறுவகம் சார் அமைப்பு

**சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சுக்கு உரித்தான பிரிவுகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள்.**

1.நிர்வாகப் பிரிவு
2.கணக்குகள் பிரிவு
3.திட்டமிடல்/ கண்காணிப்பு மற்றும் புள்ளிவிபரப் பிரிவு
4.உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு
5. உளவளத்துணைப் பிரிவு
6. அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம்
7. தனியொருவரினைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டம்

**சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சுக்கு உரித்தான திணைக்களங்கள்.**

1.சமூக சேவைகள் திணைக்களம்

2.வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம்

- கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவகம்

**சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சுக்கு உரித்தான ஏனைய நிறுவகங்கள்.**

1.தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம்

2.முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம்

3.இலங்கைச் சமூகப் பாதுகாப்புச் சபை

# அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்

# 01. உளவளத்துணைப் பிரிவு

## 1.1. தேசிய உளவளத்துணை பிரிவின் வகிபாகம்.

- ஒவ்வொரு வருடமும் தேசிய உளவளத்துணை தினம் ஒக்டோபர் மாதம் கொண்டாடப்படுதல்.
- உளவளத்துணை சேவைகள் தொடர்பிலான கொள்கைள் மற்றும் திட்டங்களைத் தயாரித்தல்.
- உளவளத்துணை சேவைகளுக்கான பிரமாணங்களைத் தயாரித்தல்.
- உளவளத்துணை சேவைகளை வழங்குகின்ற அரச நிறுவனங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் உள்ளக நிறுவகம் சார் குழுவினை நிறுவுதல்.
- பிரதேச செயலகப் பிரிவு மட்டங்களில் உளவளத்துணை உத்தியோகத்தர்களின் சேவையினைப் பயன்படுத்துதல் மற்றும் சித்சரன நிலையங்களை அமைத்தல்.
- உளவளத்துணை, உள மருத்துவம் மற்றும் அதன் பலாபலன்கள் தொடர்பில் அரச உத்தியோகத்தர்கள், சமுதாயத் தலைவர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களை அறிவூட்டுவதன் மூலம் உளவளத்துணைச் சேவையினை விரிவுபடுத்துதல்.
- இயற்கையினாலும் மற்றும் மனிதர்களினாலும் உருவாக்கப்பட்ட அநர்த்தங்களினால் பாதிகப்பட்ட சமுதாயத்திற்கு மனவடு **(Trauma)** உளவளத்துணை சிகிச்சை மற்றும் தலையிடும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்தல்.
- அரச நிறுவனங்களை விளைதிறனாகவும் மற்றும் வினைத்திறனாகவும் மேம்படுத்துவதற்கு உளப்பாங்கு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துதல்.
- உளவளத்துணை சேவைகளின் தேவைப்பாடுகளைக் கொண்ட அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு பயிற்றுவிக்கப்பட்ட உளவளத்துணையாளர்களின் சேவையினை வழங்குதல் (வைத்தியசாலைகள், சிறைச்சாலைகள், சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்கள், வானூர்திச் சங்கம்)
- உளவளத்துணை, உள மருத்துவம் மற்றும் அதன் பலாபலன்கள் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டும் துண்டுப் பிரசுரங்கள் மற்றும் வெளியீடுகளை அச்சுப் பொறித்தல் (சிங்களம் மற்றும் தமிழ் ஊடகங்கள்)
- இவ்வமைச்சின் கீழ் உள்ளவளத்துணை சேவையில் ஈடுபட்டுள்ள உளவளத்துணை உத்தியோகத்தர்களின் திறன் மேம்பாடு தொடர்பில் குறுங்கால திறன் மேம்பாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.

## 1.2. 2016 ஆம் ஆண்டில் இடம்பெற்ற செயற்பாடுகள்

### 1.2.1. தேசிய உளவளத்துணை சேவைகள் தினத்தினை ஒட்டி உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துதல்.

I. "சகலருக்கும் உளவியல் மற்றும் உள ஆரோக்கிய முதலுதவியொன்றான உளவளத்துணை" என்ற தொனிப்பொருளின் கீழ் தேசிய உளவளத்துணை சேவைகள் தினக் கொண்டாட்ட நிகழ்வு, றோயல் கண்டியன் வைபவ மண்டபத்தில் 2016 ஒக்டோபர் 13 ஆந் திகதி அரச மற்றும் அரச சார்பற்ற உளவளத்துணை சேவைகளை வழங்கும் நிறுவனங்களை ஒன்றுசேர்த்து சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சர் கௌரவ. திரு. எஸ்.பீ. திசானாயக்க அவர்களின் தலைமையில் பிரமாண்டமான முறையில் நடாத்தப்பட்டுள்ளது.

II. மேற்குறிப்பிட்ட தொனிப்பொருளினை அடிப்படையாகக் கொண்டு மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் உளவளத்துணை சேவையினை விளம்பரப்படுத்துவதை நோக்காகக் கொண்டு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் அமுற்படுத்தப்படுதல்.

**1.2.2. உளவளத்துணை சேவைகள் தொடர்பான கொள்கைத் திட்டங்களை வகுத்தல்.**

அரச மற்றும் பாதி அரச சேவையிலுள்ள உளவளத்துணை உத்தியோகத்தர்களை ஒருங்கிணைத்து உளவளத்துணை தொழில்வாண்மை தொடர்பிலான ஒழுக்கவிழுமியத் திட்டமொன்றை வரைதல் இடம்பெற்றுள்ளது. இப்பணிக்கு 15 நிறுவனங்கள் பங்களிப்புச் செய்துள்ளன.

**1.2.3. தேசிய, மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் சிகிச்சைசார் மற்றும் நிவாரணஞ் சார் உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்தல்.**

| தொடர் இல. | வேலைத்திட்டம் | வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | "பிரகாசமானதும், பலமானதுமான தேசமொன்று தொடர்பில் இளைஞர் அணியினை வலுவூட்டுவோம்" என்ற கருப்பொருளில் இளைஞர்களுக்கான உளவத்துணை விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம். | 150 | 7,500 |
| 02. | உளவியல் பரீட்சிப்பினூடாக பிள்ளைகள் மனவெழுச்சிப் பிரச்சினைகளை அடையாளங் காணும் வேலைத்திட்டமொன்றும் மற்றும் சிகிச்சையொன்றும் நடாத்துதல். | 01 | 50 |
| 03. | "ஊடகங்களைப் பாவிக்கும்போது உளவியல் புரிந்துணர்வு" என்பது தொடர்பில் அனுராதபுர மாவட்டத்தில் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகச் செயற்பாடுகளில் ஈடுபடும் ஊடகவியலாளர்களுக்கு உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டமொன்றை நடாத்துதல். | 01 | 45 |
| 04. | மாவட்ட மட்டத்தில் உள சமூகப் பிரச்சினைகளை அடையாளங் காணுதல். முன்னுரிமை மற்றும் தரகர் திட்டத்தினைத் தயாரித்தல். | 25 | 1068 |
| 05. | "உளவியல் மற்றும் உள ஆரோக்கிய முதலுதவிகள்" என்ற தொனிப்பொருளினை அடிப்படையாகக் கொண்டு பிரதேச மட்டத்தில் சமுதாயத் தலைவர்களை விழிப்புணர்வூட்டுதல். | 150 | 6000 |
| 06. | போதைப்பொருள் மீட்பு நிகழ்ச்சித் திட்டம் - படுவஸ்நுவர பிரதேச செயலகம் | 01 | 40 |
| 07. | "வெற்றிகரமான வாழ்க்கையொன்றுக்கான உளவளத்துணை" என்ற தொனிப்பொருளில் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டுதல். (மாவனல்ல/ரம்புக்கன/கொலன்னாவ) | 03 | 440 |
| 08. | அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டத்தினை நடாத்துதல். | 01 | 85 |

| | | | |
|---|---|---|---|
| 09. | மாத்தளை மாவட்டச் செயலகத்தில் உள சிகிச்சை தொடர்பிலான உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டம். | 01 | 10 |
| 10. | ஆயுள்வேத பாதுகாப்புச் சபையின் பாரம்பரிய சுதேச வைத்தியர்களுக்கு ஆன்மீகம்சார் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம். | 01 | 15 |
| 11. | ஹிக்கடுவ /கெந்தோட்ட வித்யாபிவர்தன வித்தியாலயம் மற்றும் பலபிட்டிய/றெவத்த தேசிய பாடசாலைகளின் மாணவர்களின் சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகளை வெற்றிகரமாகக் கட்டயெழுப்புதல் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டம். | 02 | 298 |
| 12. | நரவல்பிட்ட வடக்கு வித்தியாலயத்தில் பெற்றோர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம். | 01 | 44 |
| 13. | உளப்பாங்கு மேம்பாடுகள் மற்றும் பிள்ளைகளின் உளப் பிரச்சினைகளை அடையாளங் காண்பதற்கு ஹம்பாந்தோட்டை வலயத்தின் பாடசாலை மாணவர்களின் உளவளத்துணை ஆசிரியர்களுக்கு நிகழ்ச்சித் திட்டமொன்றை நடாத்துதல். | 01 | 67 |

### 1.2.4. “விழித்தெளச் செய்வோம் பொலன்னறுவையினை” என்ற மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்திற்கு உளவியல் உளவளத்துணையின் பங்களிப்பு

I. பொலன்னறுவை மாவட்டத்தில் தற்போதுள்ள உளவளத்துணை தலையீட்டுத் தேவைப் பிரச்சினைகளை இனங்காண்பதற்கு மாவட்ட மட்டத்தில் களச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் 34 வெளிக்கள உத்தியோகத்தர்களுடன் முன் கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டமை.

II. மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின்போது அடையாளங் காணப்பட்ட பிரச்சினைகளை மையமாகக் கொண்டு முதலாவது நிகழ்ச்சித் திட்டம் என்ற வகையில் வலிக்கந்த பிரதேச செயலகத்தின் 65 வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு மூன்றுநாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டமை.

III. இரண்டாவது நிகழ்ச்சித் திட்டம் என்ற வகையில் திம்புலாகல பிரதேச செயலகத்தின் 131 வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கென பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டமை.

### 1.2.5. கற்றுக் கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் கீழ் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உளவளத்துணைத் தலையீட்டு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.

I. உள சமூகப் பிரச்சினைகளை அடையாளங் காணுதல் மற்றும் அவற்றினைத் தடுப்பதற்கான முன்மொழிவுகளை முன்வைத்து உள ஆரோக்கியம் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை முல்லைத்தீவு மாவட்டத்தின் 03 பாடசாலைகளின் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு நடாத்துதல். கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை 680 ஆகம்.

II. உள சமூகப் பிரச்சினைகளை அடையாளங் காணுதல் மற்றும் அவற்றினைத் தடுப்பதற்கான முன்மொழிவுகளை முன்வைத்து உள ஆரோக்கியம் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை முல்லைத்தீவு மாவட்டத்தின் 03 பாடசாலைகளின் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு நடாத்துதல். கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை 361 ஆகும்.

III. திருகோணமலை மாவட்டத்தின் முன்பள்ளி ஆசிரியர்கள், மகளிர் சங்க அங்கத்தவர்கள், இளைய சமுதாயங்களின் இளைஞர்கள், கிராம அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 50 பேர்களின் பங்குபற்றுதலுடன் உள சமூகப் பிரச்சினைகளை அடையாளங் கண்டு அவற்றினைத் தடுப்பதற்கு உள ஆரோக்கியம் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டமொன்றினை நடாத்துதல்.

IV. மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு மற்றும் ஏறாவூர் பிரதேச செயலகப் பிரிவுகளின் அரச உத்தியோகத்தர்களுக்கு மனவழுத்த முகாமைத்துவம் தொடர்பில் 03 நிகழ்ச்சித் திட்டங்கள் 505 பேர்களின் கலந்துகொள்ளலுடன் நடாத்தப்பட்டமை.

1.2.6. **இயற்கையினாலும் மற்றும் மனிதர்களினாலும் உருவாக்கப்பட்ட அழிவுகளுக்கு உட்பட்ட சமுதாயத்திற்கு மனவடு உளவளத்துணை சிகிச்சை மற்றும் தலையீட்டு நிகழ்ச்சித் திட்டத்தினை அமுற்படுத்துதல்.**

I. கேகாலை மாவட்டத்தின் அறணாயக்க மற்றும் புலத்கொகுபிட்டிய பிரதேச செயலகப் பிரிவுகளில் இடம்பெற்ற மண் சரிவு அநர்த்த நிலைமை தொடர்பில் உளவளத்துணை தலையீட்டு நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துதல். 230 குடும்பங்களுக்கு சேவைகள் வழங்கப்பட்டுள்ளன.

II. கொழும்பு மாவட்டத்தின் வெள்ளப்பெருக்கின் காரணமாக பாதிப்புக்குட்பட்டவர்களுக்கு உளவளத்துணைத் தலையீட்டு நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துவதற்குத் தேவையான அறிவினை 140 அரச உத்தியோகத்தர்களுக்குப் பெற்றுக் கொடுத்தல்.

III. கொழும்பு மாவட்டத்தின் சாலாவ பிரதேசத்தில் ஏற்பட்ட திடீர் அநர்த்தங்களுக்கு முகங்கொடுத்துள்ள நபர்களுக்கு உளவளத்துணைத் தலையீட்டு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல். 936 பயனாளிக் குடும்பங்கள் கலந்து கொண்டனர்.

### 1.2.7. ஆற்றலைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டங்கள்.

I. உளவளத்துணை உதவி உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (உளவளத்துணை) தொடர்பில் 06 திறன் விருத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டமை.

a) 2016 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட புதிய உத்தியோகத்தர்களுக்கு இரண்டு நாள் ஆரம்பப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டமை,

b) உளவளத்துணை உத்தியோகத்தர்கள் (உளவளத்துணை) தொடர்பில் மூன்றுநாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டமை.

c) உள சமூகப் பிரச்சினைகளை அடையாளங் காண்பதற்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கு ஒருநாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டமை.

d) உளவளத்துணை உதவியாளர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு (உளவளத்துணை) மூன்றுநாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டமை.

e) போதைப்பொருள் மீட்சி தொடர்பில் கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் கடமையில் ஈடுபடுவதற்கு விருப்பினை வெளிப்படுத்திய உளவளத்துணை உதவியாளர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (உளவளத்துணை) 50 பேர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டமை.

f) உளவளத்துணை உதவி உத்தியோகத்தர்களுக்கு மூன்றுநாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டமை.

II. ஆசிய மன்றத்துடன் இணைந்து ஒரே மட்டக் குழுவினைக் கண்காணித்தல் மற்றும் மேற்பார்வை தொடர்பிலான நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் பின்னூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துல்.

III. ஆசிய மன்றத்தின் அனுசரணையின் கீழ் இவ்வமைச்சு சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சினூடாக வழங்கப்படும் உளவளத்துணை சேவையினை பொதுவான தளமேடைக்குக் கொண்டு வந்து அது தொடர்பில் பயிற்சி வேலைத்திட்டத் தொடர்கள் அமுறப்படுத்தப்பட்டமை.

IV. மாவட்ட மட்டத்தில் நடாத்தப்படும் உள சமூகப் பிரச்சினைகளை அடையாளங் காணுதல் தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கான ஒரு நாள் திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டமை.

### 1.2.8. **தேசிய மட்டங்களில் காலாண்டு மற்றும் மாவட்ட மட்டங்களில் மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துதல் மற்றும் உளவளத்துணை உத்தியோகத்தர்களின் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வைச் செயற்பாடுகளை முன்னெடுத்தல்**.

i. இவ்வமைச்சின் கீழ் மாவட்ட ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ள உளவளத்துணை உத்தியோகத்தர்களூடாக மாவட்ட மட்டங்களில் உளவளத்துணைச் சேவைகளை வழங்குதல் தொடர்பில் காலாண்டு முன்னேற்றத்தினைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் உளவளத்துணைச் சேவைகளை வழங்கும்போது முகங்கொடுப்பதற்கு நேரிடும் இன்னல்கள் மற்றும் தற்போதுள்ள பிரச்சினைகள் தொடர்பில் காலாண்டுக்கு ஒரு தடைவை கலந்துரையாடுதல்.

ii. மாவட்டச் செயலாளரின் தலைமையில் மாவட்டத்திலுள்ள உளவளத்துணை உதவியாளர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகததர்களின் (உளவளத்துணை) கலந்துகொள்ளலுடன் மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை மாவட்டச் செயலகத்தில் நடாத்துதல்.

### 1.2.9. 24 மணிநேர நடமாடும் தொலைபேசி ஆலோசனை சேவைகளை வழங்குதல்.

டயலொக் கையடக்கத் தொலைபேசி வலைப்பின்னலினூடாக 88 உளவளத்துணை உதவி உத்தியோகத்தர்களினால் மக்களின் உளப் பிரச்சினைகள் மற்றும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு உளவளத்துணை சேவையினை வழங்குதல்.

### 1.2.10. உளவளத்துணைச் சேவைகளைத் தரப்படுத்துதல்.

இவ்வமைச்சின் கீழ் உளவளத்துணைச் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் உளவளத்துணைச் சேவைகள் வழங்குவதை தரப்படுத்துவதற்குப் பின்வரும் செயற்பாடுகள் அமுற்படுத்தப்படுகின்றன..

I. ஒரே மட்டக் குழுவினைக் கண்காணித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

II. பயனாளிகளை மதிப்பீடு செய்வதற்கான பொறிமுறையினைப் பயன்படுத்துதல் (Client Assessment Tool)

- பயனாளிகளை இனங்காண்பதற்கான படிவம் (Client Screening Form)
- பயனாளிகளைச் சேர்த்துக்கொள்ளுவதற்கான படிவம் (Client Intake Form)
- பயனாளிகளை மதிப்பீடு செய்வதற்கான அறிக்கை மற்றும் பின்தொடர் மதிப்பீட்டு அறிக்கை (Intake/Follow up Client Assessment Form)

III. உளவளத்துணைச் சேவைக்குரிய பின்வரும் தகவல்களுடனான தரவு முறைமையொன்றைத் தயாரித்தல்.

- உளவளத்துணைத் தொடர் பொழிப்பு (Counseling Session Report)
- மாதாந்த முன்னேற்ற அறிக்கை - விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் (Monthly Progress Report - Awareness Program)
- மாதாந்த முன்னேற்ற அறிக்கை - திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் (Monthly Progress Report - Capacity Building Program)
- தொலைபேசிச் சேவையின் முன்னேற்றம். (Phone Counseling Services Progress)
- மாதாந்த மாவட்ட முன்னேற்ற மீளாய்வு அறிக்கை (Monthly District Progress Meeting Report)
- மாதாந்தப் பொழிப்பு ஆவணம் - மாவட்ட மட்டம். (Monthly Summery Sheet - District Level)

IV. உளவளத்துணைச் சேவையினைத் தரப்படுத்துவதற்குத் தேவையான பயிற்சியினை வழங்குதல்.

## 1.3. நிதிசார் மற்றும் பௌதிக முன்னேற்றம் (2016.12.31 ஆந் திகதி வரை)

| தொழிற்பாடுகள் | பௌதிக முன்னேற்றம் | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| தேசிய உளவளத்துணை தினம் | தேசிய வைபவத்தினை நடாத்துதல். | 1.72 | 525 பேர் கலந்துகொள்ளுதல் |
| உளவளத்துணைச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களை ஒருங்கிணைத்தல். | 03 நிகழ்ச்சித் திட்டங்கள் | 0.10 | 15 நிறுவனங்கள் |
| 24 மணி நேர கையடக்கத் தொலைபேசியினூடான உளவளத்துணைச் சேவை. | 88 தொலைபேசிகள் | 0.30 | 2638 |
| வெளியீடுகள் | • “உளவளத்துணைச் சஞ்சிகையினை வெளியிடுதல் 1000 | 2.01 | பொதுமக்கள் |

| | | | |
|---|---|---|---|
| | • மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் 180 பதாதைகளை வழங்குதல்.<br>• பயனாளிகளை மதிப்பீடு செய்வதற்கு விண்ணப்ப ப் படிவங்களை அச்சுப் பொறித்தல் 462500 | | |
| திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் | 06 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 1.83 | 214 |
| தடுத்தல் மற்றும் குழு உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்கள் | • பிரதேச நிகழ்ச்சித் திட்டங்கள் - 310<br>• மாவட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் - 25<br>• வேண்டுகோள்களின் கீழான நிகழ்ச்சித் திட்டங்கள் - 02<br>• கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுடனான நிகழ்ச்சித் திட்டங்கள் - 09<br>• விழித்தெளச் செய்வோம் பொலன்னறுவை நிகழ்ச்சித் திட்டம் - 03<br>• அநர்த்த நிகழ்ச்சித் திட்டங்கள் (கேகாலை, கொழும்பு)<br>• கந்தக்காடு சிகிச்சைகள் மற்றும் புனர்வாழ்வு நிலையம் தொடர்பில் உளவளத்துணை நிகழ்ச்சித் திட்டங்களைக் கலந்துரையாடுதல். 02 | 6.69 | 18709 நபர்கள் |
| ஒருங்கிணைத்தல் | • காலாண்டு என்ற ரீதியில் அமைச்சின் நிகழ்ச்சித் திட்டங்கள் 04<br>• மாவட்ட மட்டங்களில் முன்னேற்ற மீளாய்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் 240 | 0.36 | 214 |
| பிற | • சித்சரண நிலையங்களின் மின்சாரப் பட்டியல் கொடுப்பவினைச் செலுத்துதல் நிலையங்கள்<br>• எழுதுகருவிகள்<br>• மேலதிக எரிபொருள் | 1.53 | - |
| மொத்தம் | | 14.54 | |

# 02. அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம்

## 2.1. நோக்கம்

அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளை மேம்படுத்துதல், முன்னேற்றுதல், பாதுகாத்தலுக்கும் மற்றும் அதனுடன் தொடர்பான ஏற்பாட்டினைத் திட்டமிடுவதற்காகவும் விதிக்கப்பட்ட 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளைப் பாதுகாத்தற் சட்டத்திற்கான ஏற்பாட்டினைத் திட்டமிடுவதே அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின் நோக்காகும்.

## 2.2. பணிகள் மற்றும் செயற்பாடுகள்

மேற்குறிப்பிட்ட குறிக்கோள்களை நிறைவேற்றுவது தொடர்பில் அங்கவீனமுற்ற நபர்களினைப் புனர்வாழ்வளித்தல், அவர்களுக்கு நலன்புரி மற்றும் நிவாரண உதவியினை வழங்குதல் போன்ற தேசியக் கொள்கைகளை அமுறப்படுத்துவதற்கான சட்ட ஏற்பாடுகளை அமுறப்படுத்துவதற்காகத் தீர்வுத் தீர்மானங்களை எடுக்கும் பொருட்டு அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அத்தீர்வுத் தீர்மானங்களுடன் தொடர்புபட்ட பின்வரும் பணிகள் மற்றும் செயற்பாடுகளானவை, அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தினால் அமுறப்படுத்தப்பட்டு வருகின்றன.

- அங்கவீனமுற்ற நபர்களின் நலன்புரி மேம்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு வறுமையினைக் குறைத்தல் மற்றும் புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டங்கள்.
- அங்கவீனம் ஏற்படுவதற்கான பிரதான காரணங்களைக் கண்டறிதல் மற்றும் கட்டுப்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள்.
- அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பான சரியான தரவுகள் மற்றும் புள்ளி விபரங்களை முன்னெடுத்துச் செல்லல்.
- அங்கவீனமுற்ற நபர்களின் அபிவிருத்தி மற்றும் நலன்புரிக்காக ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனங்களின் செயற்பாடுகளைக் கண்காணித்தல், வழிகாட்டல் மற்றும் தேவையானபோது உதவிகளை வழங்குதல்.
- ஒன்றுதிரட்டும் அபிவிருத்திக்கான பிரவேசத்தினை இலகுபடுத்துதல், பௌதிகச் சூழலைத் தயாரித்தல், அது தொடர்பாக உரிய பகுதியினரின் செயற்பாடு, வழிகாட்டல் மற்றும் தேவையானபோது உதவிகளை வழங்குதல்.
- கல்வி கிடைக்க வேண்டிய வயதிலுள்ள பாடசாலை செல்லுகின்ற மற்றும் தற்போது பாடசாலை செல்லாத அங்கவீனமுற்ற பிள்ளைகளைத் தொடர்ச்சியாகப் பாடசாலைக் கல்விக்கு அனுப்புவதற்கான வேலைத்திட்டங்களை அமுறப்படுத்துதல் மற்றும் தேவையானபோது உதவிகளை வழங்குதல்.
- அங்கவீனமுற்ற நபர்களை ஒன்றிணைக்கும் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வித்தல் தொடர்பாக உள்ள சமூகப் பொறுப்பு சம்பந்தமாகப் பொதுமக்களை விழிப்புணர்வூட்டுதல் மற்றும் விளம்பரச் செயற்பாடுகள் தொடர்பான நிகழச்சித் திட்டங்களை அமுறப்படுத்தல்.
- அங்கவீனமுற்ற நபர்கள் அதிகளவிலுள்ள பிரதேசங்களைக் கண்டறிந்து அங்கு அங்கவீனத் தன்மை அதிகரிப்பதிற் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் மீது பொது மக்களின் கவனத்தினைச் செலுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை அமுறப்படுத்துதல், பின்னூட்டற் செயற்பாடுகள் மற்றும் அதன் முன்னேற்றத்தினைப் பகுப்பாய்வு செய்தல்.

## 2.3. பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றம் (2016.12.31 வரை)

2.3.1. அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பாக சட்டரீதியான ஏற்பாட்டினை அமுற்படுத்தல்.

### 2.3.1.1. அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளைப் பாதுகாத்தலுக்கான புதிய சட்ட வரைவு

அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளைப் பாதுகாத்தலுக்கான 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினை மேலும் மேம்படுத்தி, விசேட வரைவுக் குழுவொன்றினூடாக வரையப்பட்டு நிறைவு செய்யப்பட்ட புதிய சட்ட வரைவு சட்டவரைஞர் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

### 2.3.1.2. சைகை மொழிச் சட்ட வரைவு

சைகை மொழி அங்கீகரிக்கப்பட்ட மொழியொன்றாக பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதால் அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட சைகை மொழிச் சட்ட வரைவு சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு முன்வைக்கப்படும் வரை, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைவு இற்றை வரை முன்வைக்கப்பட்டுள்ளது. அச்சட்ட வரைவினை மேலும் மேம்படுத்துதல் வேண்டும் என முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளின் பிரகாரம் அத்துறை தொடர்பான அறிவினைக் கொண்ட நபர்களினை உள்ளடக்கிய குழுவின் கருத்துக்கள் மற்றும் பிரேரணைகளைப் பெற்றுக் கொள்ளுவதற்கு தேசிய சபையினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன், அப்பரிந்துரைகள் மீண்டும் சட்டவரைஞர் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

### 2.3.1.3. வெள்ளைப் பிரம்புப் பாவனையாளர்களுக்குச் சட்டரீதியான பாதுகாப்பினை வழங்குவதற்கான சட்ட வரைவு

அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பில் 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டத்தினூடாக விழிப்புலனற்றவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதால் புதிய சட்டத்தினைத் தயாரிப்பதற்காக 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதித் தொடர்களைத் தயாரித்தல் பொருத்தமானது என சட்டவரைஞர் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளதால் அதன் பிரகாரம் ஒழுங்குவிதித் தொடரினைத் தயாரித்து சட்டவரைஞர் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

### 2.3.1.4. அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைள் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கையினை அங்கீகரித்தல்

இலங்கையினால் 2007 ஆம் ஆண்டு, மார்ச் 30 ஆந் திகதி இணக்கப்பாடு வெளிப்படுத்தப்பட்டுள்ள அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் பட்டயத்தினை அங்கீகரிப்பதற்கு முன்வைக்கப்பட்டுள்ள அமைச்சரவை விஞ்ஞாபனம், அமைச்சரவையினால் 2015.12.23 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் ஐக்கிய நாடுகளின் அமைப்புக்கு இவ் அங்கீகாரம் அறிவிக்கப்பட்டதன் பின்னர் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் 2016.02.08 ஆந் திகதி இலங்கை இவ்வுடன்படிக்கையினை அங்கீகரித்துள்ள நாடொன்றாகப் பிரகடனஞ் செய்யப்பட்டுள்ளது.

### 2.3.2. வருமானத்தினை உழைப்பதற்கு சுய தொழில் உதவியினை வழங்குதல்.

அங்கவீனமுற்ற நபர்களைக் கொண்ட குறைந்த வருமானப் பயனாளி குடும்பங்களில் நிலவும் பொருளாதார ரீதியான வறுமையினைக் குறைப்பதற்குச் சுய தொழில் உதவியொன்றை ஆரம்பித்தல் அல்லது மேம்படுத்துவதற்காக நபர் ஒருவருக்கு அல்லது குடும்பம் ஒன்றுக்கு ஆகக்கூடியவாறு ரூபா.

25,000/- ஐ வழங்கி சுய தொழில் உதவியொன்றை ஆரம்பித்தல், முகாமை செய்தல், உற்பத்திகளின் தரத்தினை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் விற்பனையில் தலையிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் இவ் வேலைத்திட்டத்தின் கீழ் இடம்பெற்று வருகின்றன.

**முன்னேற்றம்**

| பயனாளிகளின் எண்ணிக்கை | நிதி (ரூ.மி) |
|---|---|
| 386 | 92.54 |

### 2.3.3. நலன்புரி மற்றும் அபிவிருத்தி நிலையங்களைக் கண்காணித்தல்.

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்திற் பதிவு செய்துள்ள தன்னார்வத் தொண்டர் அமைப்புக்களினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நலன்புரி மற்றும் அபிவிருத்தி நிலையங்களில் காணப்படும் தராதரம் தொடர்பில் கண்காணித்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் தேவையானபோது உதவி வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துதல். இவ்வாறு பதிவு செய்யப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வரும் நிறுவகங்கள் 130 ஆகும்.

### 2.3.4. அங்கவீனமுற்ற நபர்களுக்கு உட்பிரவேசிப்பு வசதிகளை வழங்குதல்.

1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டத்தின் பிரகாரம், 2006.10.17 ஆந் திகதிய 1467/15 என்ற இலக்க மற்றும் 2009.09.18 ஆந் திகதிய 1619/24 என்ற இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலினூடாக வெளியிடப்பட்டுள்ள 2006 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பான (உட்பிரவேசிப்பு) கட்டளைகளுக்கமைய தற்போது நடைமுறையிலுள்ள அனைத்து பிரசித்திபெற்ற கட்டிடங்கள், பிரசித்தி பெற்ற இடங்கள் மற்றும் பொது சேவைகள் வழங்கப்படுகின்ற இடங்கள் அங்கவீனமுற்ற நபர்கள் பிரவேசிக்கக்கூடியவாறு அமைக்கப்படுதல் வேண்டும்.

எனினும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட வரைபடங்கள் அங்கவீனமுற்ற நபர்களுக்கு மிகவும் இலகுவான வகையிலும் மற்றும் தற்போதைய நிலைமைக்குப் பொருந்தக்கூடியவாறு திருத்தியமைப்பதற்கு சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சின் தலைமையில், நகர அபிவிருத்தி அதிகார சபை, போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு, இலங்கை கட்டிட நிறுவனம், நகர பொறியியல் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை போன்ற நிறுவனங்களின் பங்களிப்புடன் குழுவொன்று நியமிக்கப்பட்டு தேவையான ஒழுங்கு விதிகளைத திருத்துதவற்கான அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது.

### 2.3.5. அங்கவீனமுற்ற நபர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவினை வழங்குதல்

இதன் கீழ் குறைந்த வருமானம் பெறும் அங்கவீனமுற்ற நபர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு மாதாந்தம் ரூபா. 3000/- வீதம் வாழ்வாதார உதவிப் பணத்தினை வழங்கும் வேலைத்திட்டம் 2007 ஆம் ஆண்டிலிருந்து அமுற்படுத்தப்பட்டு வருகின்றது. இவ்வுதவியினை வழங்கும்போது குடும்ப வறுமை, வீட்டுத் தலைவர் அங்கவீனராகவிருத்தல், குடும்பத்திலுள்ள அங்கவீனமுற்றவர்களின் எண்ணிக்கை போன்ற காரணிகளைக் கவனத்திற் கொண்டு முன்னுரிமை அடிப்படையில் இக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.

| பயனாளிகளின் எண்ணிக்கை | நிதி (ரூ.மி.) |
|---|---|
| 30005 | 1,074.37 |

இவ் வேலைத்திட்டத்தினூடாக அங்கவீனமுற்ற நபர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் பொருளாதார நிலைமை, போசாக்கு, உள மற்றும் சமுதாய மட்டம் மேம்படுத்தப்பட்டுள்ளதாகக் களத்துறையில் இடம்பெற்று வருகின்ற ஆய்வுகளின் மூலம் வெளிக் கொணரப்பட்டுள்ளது.

### 2.3.6. தீராத நாட்பட்ட சிறுநீரக நோயாளர்களுக்கு மாதாந்த வாழ்வாதாரக் கொடுப்பனவினை வழங்குதல்

தீராத நாட்பட்ட சிறுநீரக நோயின் காரணமாக வருந்தும் மக்களுக்கென அவர்களின் மருந்துகளைப் பெற்றுக் கொள்ளுதல் அல்லது சிகிச்சைக்குச் செல்லுவதற்கு நிதியுதவி வழங்கப்படுகின்றது. இந் நோய் அதிகமாகக் காணப்படும் மாவட்டங்களான குருனாகல், அம்பாறை, வவுனியா, மாத்தளை, மொனராகல, பொலன்னறுவை, முல்லைத்தீவு, அனுராதபுரம், திருகோணமலை போன்ற மாவட்டங்களின் அமைச்சின் பரிந்துரைகளின் கீழ் தெரிவு செய்யப்பட்ட குருதியினைச் சுத்திகரிப்புச் செய்யும் நோயாளர்கள் 19,645 பேருக்கு ரூபா. 3000/- கொடுப்பனவொன்று வழங்குவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், 2016, திசம்பர் 31 ஆந் திகதி வரையில் அதில் 15,453 பேருக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது.

### 2.3.7. கல்வி உதவியினை வழங்குதல்.

குறைந்த வருமானத்தினைக் கொண்ட அங்கவீனமுற்ற சிறார்கள் மற்றும் அங்கவீனமுற்ற பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு ஒரு தடைவை மாத்திரம் வழங்கப்படும் இக்கல்வி உதவி ஆகக்கூடிய வகையில் ரூபா. 10,000/- ஆகும் என்பதுடன் இப்பணம் பாடசாலை செல்வதற்குப் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கும் மற்றும் கல்வி உபகரணங்களை வழங்குவதற்குமாக வழங்கப்படுகின்றது. இவ்வுதவியினை வழங்குவதன் காரணமாகப் பாடசாலை செல்கின்ற வயதிலுள்ள அங்கவீனச் சிறார்கள் கல்வியினைத் தொடர்வது அதிகரித்துள்ளதாகக் களத்துறையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து வெளிக்கொணரப்பட்டுள்ளது. இவ்வருடத்தின் 2016.12.31 ஆந் திகதியன்றைய முன்னேற்றம் வருமாறு.

| பயனாளிகளின் எண்ணிக்கை | நிதி (ரூ.மி.) |
|---|---|
| 377 | 3.132 |

ஆரம்பத்திலேயே அடையாளங் காணப்படாத சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டு தாய் அல்லது தந்தை இல்லாமற்போயுள்ள உயர் தரத்தினைத் தொடரும் குறைந்த வருமானப் பயனாளி குடும்பங்களின் மாணவர்களுக்கு மாதாந்தம் ரூபா. 1000/- உதவி நிதியினை வழங்குவதற்கு ஜனாதிபதி நிதியத்தின் அனுசரணையுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது அதன் பிரகாரம் 2016 ஏப்ரல் மாதம் - திசம்பர் 31 ஆந் திகதி வரையில் அனுராதபுரம், பதுளை, வவுனியா போன்ற 03 மாவட்டங்களின் 112 மாணவர்களுக்கு ரூபா. 752000/- நிதியினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 2.3.8. உதவி உபகரணங்களை வழங்குதல்.

அங்கவீனமுற்ற நபர்களின் புனர்வாழ்வுச் செயற்பாடுகளுக்கு உதவுவதற்காகவும், ஒன்றுதிரட்டும் மேம்பாட்டுக்குக்குப் பங்குபற்றச் செய்வதற்கும் மற்றும் அவர்களைச் சுயமாக இயங்கும் நபர்களாக உருவாக்குவதற்குமாக மூக்குக் கண்ணாடிகள், சக்கர நாற்காலிகள், செவிப்புலன் கருவிகள், முச்சக்கர வண்டிகள் மற்றும் ஊன்றுகோல்கள் போன்ற உபகரணங்கள் மற்றும் அங்கவீனமுற்ற நபர்களின் தேவைப்பாட்டின் பிரகாரம் விசேட உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கும் நிதியுதவியினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குறைந்த வருமான நபர்களுக்கு வழங்கப்படும் இவ் உபகரணங்கள் மருத்துவப் பரிந்துரையின் கீழ் பின்வருமாறு இவ்வருடத்தினுள் வழங்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில 98 நடமாடும் சேவைகள் வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

| ஊன்று கோல்கள் | மூக்குக் கண்ணாடி கள் | சக்கர நாற்காலிகள் (சாதாரணம் மற்றும் கொமட்டுடன் கூடிய) | விசேட உபகரணங்க ள் | கையூன்று கோல்கள் | செவிப்புலக் கருவிகள் | வெ ள்ளைப் பிரம்புகள் | நிதி (ரூ.மி.) |
|---|---|---|---|---|---|---|---|
| 93 | 56406 | 303 | 35 | 139 | 06 | 0 | 13.548 |

### 2.3.9. வீடமைப்பு உதவி வேலைத்திட்டம்

வாழ்வதற்கு வீடொன்றில்லாத குறைந்த வருமானம் பெறும் அங்கவீனமுற்ற நபர்களுக்கு அல்லது அவருக்கு உணவு வழங்கிப் பாதுகாக்கின்ற குடும்பங்களுக்காகப் புதிய வீடொன்றை நிர்மாணிப்பதற்கு, வீட்டின் பகுதியினை நிர்மாணிப்பதற்கு ரூபா. 250,000/- ஆகக்கூடியதன் அடிப்டையிலும் மற்றும் வீட்டினைப் பழுதுபார்ப்பதற்கு ரூபா. 150,000/- ஆகக்கூடியதன் அடிப்படையிலும் உதவிகள் வழங்கப்படுகின்றன. சுப்பிரி வாசனா சம்பத்த லொத்தர் விற்பனை வருமானங்களிலிருந்து 5% இற்றை வரையில் அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய நிதியத்திற்கு வரவிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2016.12.31 ஆந் திகதியன்று 531 வீடுகளுக்கென ரூபா. 49.846 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.

### 2.3.10. வைத்திய உதவி வழங்குதல்

அங்கவீனமுற்ற நபர்கள் மற்றும் நீண்டகாலமாக நோய்களினால் பீடிக்கப்பட்டுள்ள நபர்களுக்கு அரச வைத்தியசாலைகளில் நீண்டகாலமாக மருந்துகளைக் பெற்றுக்கொள்ளும்போது அவ்வைத்தியசாலைகளில் வழங்கப்படாத மருந்துகளைப் பெற்றுக்கொள்வதற்காகவும், சிகிச்சைகளுக்குச் செல்வதற்காகவும், பயணச் செலவுகளை ஈடுசெய்வதற்காகவும், இதயம், வில்லைகள், சிறுநீரகங்கள், மூளை, எலும்பு முறிவு மற்றும் முழங்கால் பொருத்துதல் போன்ற சத்திர சிகிச்சைகளுக்குத் தேவையான செலவுகளை மீள்நிரப்புவதற்கும், நீர் மெத்தை, வாயு மெத்தை, கதைப்பதற்கான உபகரணங்கள் போன்ற விசேட வைத்திய உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கும், .குருதி சுத்திகரிப்பு போன்றவற்றிற்காக மாதாந்தம் ரூபா. 6000/- ஐ விட குறைந்த வருமானம் பெறும் குடும்பமொன்றுக்கு வைத்திய உதவி வேலைத்திட்டத்தின் கீழ் ஆகக்கூடியது ரூபா. 20000/- (இருபதாயிரம்) உதவிப் பணம் வழங்கப்படுகின்றது.. 2016 திசம்பர் 31 ஆந் திகதி வரை பின்வருமாறு மருத்துவ உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| பயனாளிகளின் எண்ணிக்கை | நிதி (ரூ.மி.) |
|---|---|
| 406 | 6.064 |

### 2.3.11. பாடநெறிகள்

அங்கவீனமுற்ற நபர்களின் சேவைத் தேவைப்பாடுகளை இலகுவில் நிறைவேற்றிக் கொடுப்பதற்கு அவர்களுடன் தொடர்பாடலினை ஏற்படுத்திக் கொள்வது மிக முக்கியமானது. அவர்களின் பணிகளை மிகவும் விளைதிறனாகவும், வினைத்திறனாகவும் நிறைவேற்றுவதற்கு அரச உத்தியோகத்தர்களுக்குச் சைகை மொழி, பிறெய்ல் விஞ்ஞான முறைமை மற்றும் நடமாடுதலில் உதவும் பயிற்சி

வேலைத்திட்டமொன்றும் அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தினூடாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 2016 ஆம் ஆண்டில் இரண்டு குழுவுக்குப் பாடநெறி நடாத்தப்பட்டுள்ளதுடன் அதனூடாக 50 உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

### 2.3.12. பாதுகாப்பு இல்லங்களுக்கு உதவி வழங்குதல்.

குணப்படுத்த முடியாத வியாதிகளைக் கொண்ட பல அங்கவீனமுற்ற நோயாளர்களைப் பராமரித்து வருகின்ற இராஜகிரிய விக்டோரியா இல்லத்தின் மின்சாரம் மற்றும் நீர்க்கட்டணங்களை வழங்குவதற்கும் மற்றும் ஊழியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகளை வழங்குவதற்குமென 2016 ஆம் ஆண்டு தொடர்பில் ரூபா. 8 மில்லியன் ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டுள்ளது.

### 2.3.13. தன்னார்வத் தொண்டு அமைப்புக்களுக்கு உதவிகள் வழங்குதல்.

அங்கவீனமுற்ற நபர்களுக்காகச் செயற்பட்டு வரும் தன்னார்வத் தொண்டு அமைப்புக்களின் வசதிகளை மேம்படுத்துவதற்கு ரூபா. 3 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2016 திசம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா. 2.299 மில்லியன் செலவு செய்யப்பட்டு 12 நிறுவனங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

## 2.4. விசேட செயற்பாடுகள்

### 2.4.1. அடையாளங் காணப்படாத நாட்பட்ட சிறுநீரக நோயினால் (CKDU) மரணித்த பெற்றோர்களின் உயர் தரத்தினைத் தொடரும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் உதவிகளை வழங்குதல்.

அடையாளங் காணப்படாத நாட்பட்ட சிறுநீரக நோயினால் (CKDU) தாய் அல்லது தந்தை மரணித்த உயர்தரத்தினைத் தொடரும் பிள்ளைகளுக்கென அனுராதபுரம், பதுளை, வவுனியா போன்ற 03 மாவட்டங்களிலுமுள்ள 752 மாணவர்களுக்கு ஏப்ரல் மாதத்திலிருந்து திசம்பர் மாதம் வரை மாதாந்தம் ரூபா. 1000/- வீதம் ரூபா. 752,000 வழங்கப்பட்டுள்ளது. ஒதுக்கீடு, ஜனாதிபதிச் செயலகத்தினூடாக வழங்கப்பட்டுள்ளது.

# 03. தனிப் பெற்றாரைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம்

## 3.1. அறிமுகம்

தற்போதைய சமுதாயத்தில் தனியொருவரைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை துரிதகதியில் அதிகரித்து வருகின்றது. விதவைகள், தபுதாரர்கள் மற்றும் கணவனாற் கைவிடப்பட்டவர்கள் தமது வாழ்க்கையினைக் குழந்தைகளுடன் முன்னெடுத்துச் செல்வதிற் பாரிய சவால்களை எதிர்கொள்வதால், அவ்வாறான தனிப் பெற்றாரைக் கொண்ட சிறார்களுக்கு அவர்களது கௌரவம் அல்லது ஆளுமைக்கு எள்ளளவும் பங்கம் ஏற்படாதவாறு பாதுகாத்து அக்குடும்பங்களை சமுதாய மட்டத்தில் உயர்த்துவதற்கு உதவிக் கரம் நீட்டுவதே இந்நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும்.

### 3.1.1. பயனாளிகளைத் தேர்ந்தெடுத்தல்.

- திடீர் விபத்துக்கள், தற்கொலை போன்ற சம்பவங்களின் விளைவாகத் தமது கணவனின் திடீர் மரணம் காரணமாக கைவிடப்பட்ட அநாதரவற்ற பெண்களுக்காகவும் மற்றும் விசேடமாகப் பாடசாலை செல்கின்ற சிறார்களைக் கொண்ட குடும்பங்களுக்காகவும்,
- கணவரினால் மனைவி மற்றும் பிள்ளைகள் கைவிடப்படுதல் அல்லது மனைவியினால் சிறு குழந்தைகளுடன் கணவன் கைவிடப்பட்டுள்ள குடும்பங்களுக்காகவும்,
- சட்டரீதியில் திருமணமாகாது எனினும் கல்வியினைப் பெற்றும் வரும் சிறார்களைக் கொண்டு அச்சிறார்களின் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு எந்தவொரு வருமானமுமற்ற பிள்ளைகளுடன் தனிமையிலுள்ள பெண்கள்/ஆண்களுக்காவும்

மேற்குறிப்பிட்ட வகைப்படுத்தலின் கீழ்ப் பயனாளிகளைத் தெரிவு செய்யும்போது பாலூட்டும் தாய்மார்கள் அல்லது பாடசாலை செல்லும் சிறார்களைக் கொண்ட குடும்பங்களுக்கு முதலிடம் வழங்கப்படும்.

2012 குடிசன மதிப்பீட்டுத் திணைக்களத்தின் புள்ளி விபரங்களின் பிரகாரம் இலங்கையில் மொத்தத் தனியொருவரினைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை 610,945 என்பதுடன், அதில் 50 வயதிற்கு மேற்பட்ட விதவைக் குடும்பங்கள் 77,626, 50 வயதிற்குக் கீழ்ப்பட்ட விதவைக் குடும்பங்கள் 441,797, சட்டரீதியில் பிரிந்து சென்றுள்ள 50 வயதிற்கு மேற்பட்ட குடும்பங்கள் 8,856, சட்டரீதியில் பிரிந்து சென்றுள்ள 50 வயதிற்குக் கீழ்ப்பட்ட குடும்பங்கள் 9,043, கைவிட்டுச் சென்ற 50 வயதிற்கு மேற்பட்ட குடும்பங்கள் 40,436, கைவிட்டுச் சென்ற 50 வயதிற்குக் கீழ்ப்பட்ட குடும்பங்கள் 33,186 என்றவாறான அதிகரிப்பு தனிப் பெற்றாரைக் கொண்ட குடும்பங்கள் கம்பகா மாவட்டத்தில் அறிக்கையிடப்பட்டுள்ளது. இத் தனிப் பெற்றாரைக் கொண்ட குடும்பங்களினுள் மிகவும் நிர்க்கதியாக்கப்பட்டிருப்பவர்கள் பச்சிளங் குழந்தைகள் மற்றும் பெண்களே அதிகமானவர்களாகக் காணப்படுகின்றனர். இவ்வாறு நிர்க்கதியாக்கப்பட்டுள்ளதன் காரணமாக அவர்களுக்கான புகலிடம், பாதுகாப்பு மற்றும் கௌரவத்திற்கு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

அதற்கு மேலாக சிறார்களின் கல்வி மற்றும் போசணையில் சிக்கல்கள் எழுந்துள்ளதுடன் அவர்கள் பல்வேறு சமுதாயத் துஷ்பிரயோகங்களுக்கும் அதிகளவில் முகங்கொடுத்த வண்ணமுள்ளனர்.

அதே போல பாடசாலை செல்ல வேண்டிய வயதிலுள்ள பிள்ளைகளில் 2% பாடசாலை செல்லாமலிருப்பது. ஆய்வினூடாக வெளிக்கொணரப்பட்டுள்ள பிரதான விடயமாகும். பொருளாதாரப் பிரச்சினையே அதற்கான பிரதான காரணமாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இதில் அதிக தொகுதியினர் தனிப்பெற்றாரைத் தலைவராகக் கொண்ட குடும்ப அலகுக்குள் உள்ளடக்கப்பட்டவர்களே ஆவர்.

இந்நிலைமையினைக் குறைத்துக் கொள்ளுவதற்குப் பின்வரும் செயற்பாடுகள் இந்நிகழ்ச்சித் திட்டத்தினூடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது

1. தனிப் பெற்றாரைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களை மேம்படுத்துவதற்கு சுய தொழில் உதவிகளை வழங்கி, சுய தொழில்களை ஆரம்பித்தல் மற்றும் பின்னூட்டல்.
2. தனிப் பெற்றாரைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களின் பிள்ளைகளினதும் மற்றும் குடும்பங்களின் அங்கத்தவர்களினதும் வாசிப்புப் பழக்கத்தினை மேம்படுத்துவதற்கு வாசிகசாலையினை ஆரம்பித்தல்.
3. தனிப் பெற்றாரைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களின் தாய்மார்கள்/தந்தைமார்களின் பொருளாதார வலுவினை மேம்படுத்துதல், குடும்பத்தினை வலுவூட்டுதல் தொடர்பில் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைப் பொறுப்பு மற்றும் சமூக ரீதியான பொறுப்புத் தொடர்பில் அவர்களை விழிப்புணர்வூட்டி அவர்களின் பொருளாதாரத் தரத்தினை மேம்படுத்தி பிள்ளைகளின் கல்வியனைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லுவதற்குத் தேவையான அறிவினை வழங்குதல், அவர்களினால் ஆரம்பிக்கப்பட்டு வரும் கருத்திட்டங்கள் தொடர்பில் தேவையான தொழில்நுட்ப அறிவினை வழங்குவதற்கு நிகழ்ச்சித் திட்டங்களை அமுறப்படுத்தல் மற்றும் இனங்காணப்பட்டுள்ள கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய குடும்ப அமைப்புக்களை நிலைபெறச் செய்யும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுறப்படுத்துவதற்கு அதற்கு மேலாக இலக்கிடப்பட்ட குழுவின் உள மேம்பாடு தொடர்பிலான நிகழ்ச்சித் திட்டங்கள் அமுறப்படுத்தப்பட்டு வருகின்றன.

## 3.2. பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றம் - 2016.12.31

| பொழிப்பு | பௌதிக முன்னேற்றம் | நிதி ரூபா.மில்லியன் |
|---|---|---|
| 1. நபர்களுக்கு உதவி வழங்குதல் | 815 நபர்கள் | 15.88 |
| 2. பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 11 நிகழ்ச்சித் திட்டங்கள் | 0.19 |
| 3. பிள்ளைகளைப் போதைப்பொருளிலிருந்து தடுப்பதற்கு விழிப்புணர்வூட்டுதல். | 05 நிகழ்ச்சித் திட்டங்கள் | 0.12 |
| 4. வாசிகசாலையினை ஆரம்பித்தல். | 23 நிலையங்கள் | 2.02 |
| 5. வெளிக்களப் புலனாய்வு | 06 புலனாய்வுகள் | 0.11 |
| 6. தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவிலுள்ள தனிப் பெற்றாரைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களின் பொருளாதாரம் மற்றும் அங்கத்தவர் மேம்பாட்டினை உருவாக்குதல். (வலிகந்த பிரதேச செயலகப் பிரிவு) | 02 கலந்துரையாடல்கள்<br>02 சுய தொழில்<br>12 வீடமைப்பு உதவிகள்<br>03 கல்வி உதவிகள் | 0.94 |
| 7. பிற | | 0.74 |
| **மொத்தம்** | | **20.00** |

தனியொருவரினைத் தலைவராகக்கொண்ட குடும்ப அலகுகளில் தொழிலற்ற தன்மையினைக் குறைத்து அவர்களைத் தேசியப் பொருளாதாரத்தின் பங்காளிகளாக உருவாக்குவதனூடாக சமூக மேம்பாட்டிற்குப் பங்களிப்புச் செய்யும் நபர்கள் தொகுதியொன்றை உருவாக்குதல் இந்நிகழ்ச்சித் திட்டத்தினை அமுறப்படுத்துவதனூடாக இடம்பெற்றுவரும் பாரிய சேவையொன்றாகும்.

# 04. கிராமிய அபிவிருத்திப் பிரிவு

## 4.1.சமுர்த்தி மாதிரிக் கிராமங்கள் நிகழ்ச்சித் திட்டம்

### 4.1.1. அறிமுகம்

சமுர்த்தி மாதிரிக் கிராமங்கள் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக மக்கள் வாழ்க்கையினை விழித்தெளச் செய்வதற்கு கிராமிய மக்களை வலுவூட்டுவதனூடாக வாழ்வாதார மேம்பாட்டுக் கருத்திட்டங்களுக்கு அனுப்புதல், அது தொடர்பில் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல், கிராம உற்பத்திகளுக்கு விற்பனை வசதிகளை வழங்குதல், கிராமத்தினுள் காணப்படும் வளங்களைச் சரியானவாறு பயன்பாட்டிற்கு எடுத்து கிராமியத் தொழிற்சாலைகளை மேம்படுத்துதல், நச்சுத்தன்மையற்ற சேதனைப் பயிர்கள் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டுதல் மற்றும் கப்பல் மரக்கறிகள், பழங்களை நுகர்வதனூடாக குடும்பத்தின் போசணையினை உயர்த்துதல், கிராமிய மக்களின் ஆன்மீகம்சார் ஒழுக்க விழுமியங்களை மேம்படுத்துவதனூடாக சிறந்த பிரஜைகளாக உருவாக்குதல், அனைவரும் உயிர் வாழ்வதற்கான பாதுகாப்பு மற்றும் சிறந்த ரம்மியமான சூழலொன்றைக் கட்டியெழுப்புதல், கிராமத்தினுள் வறுமையினைக் குறைத்தல் போன்ற விசேட நோக்கங்களைத் தொலைநோக்காகக் கொண்டு செயற்பட்டு வருவதுடன், இக்கிராமங்களைப் பிரதேச செயலகப் பிரிவின் மாதிரியொன்றாக முன்னோடிக் கிராமங்களாக அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் முதலாவது கட்டத்தின் கீழ் மாவட்டமொன்றுக்கு ஆகக்குறைந்த வகையில் ஒரு கிராமம் என்றவாறு 40 கிராமங்களைத் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிராமத்தினைத் தெரிவு செய்யும்போது, குறைந்த வருமானப் பயனாளிகளை அதிகமாகக் கொண்ட கிராமமொன்றாக இருத்தல் மற்றும் கிராமத்தினுள் காணப்படும் பொருளாதாரம், சமூகம், கலாசாரம், ஆன்மீகம், சூழல் போன்ற சகல பிரிவுகளையும் மேம்படுத்துவதற்குள்ள சாத்தியத்தின் மீது அவதானம் செலுத்தப்படும் என்பதுடன், செழிப்பான கிராமமொன்றாக மாற்றும்வேளையில் கிராமிய மக்களின், உத்தியோகத்தர்களின் மற்றும் கிராமத்துடன் தொடர்பான பகுதியினரின் உளப்பாங்குகள் மற்றும் விளைதிறன் தொடர்பில் கவனத்திற் கொள்ளப்படும்.

இந் நிகழ்ச்சித் திட்டத்தினை அமுற்படுத்துவதற்கு வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தினூடாக ஒரு கிராம்மொன்றுக்கு ரூபா. 7.00 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஒதுக்கீடுகளின் கீழ் இவ்வமைச்சின் கிராமிய அபிவிருத்திப் பிரிவின் உத்தியோகத்தர்களூடாக இந்நிகழ்ச்சித் திட்டத்தினைச் செயற்படுத்துதல், கண்காணிப்பு மற்றும் பின்னூட்டற் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றது. மாவட்டச் செயலம், பிரதேச செயலத்தின் வாழ்வின் எழுச்சி அபிவிருத்திப் பிரிவு மற்றும் கிராமிய மட்டத்தின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் மற்றும் குடும்ப சுகாதார ஊழியர்கள் போன்ற கிராமத்துடன் தொடர்பான உத்தியோகத்தர்களூடாக இந்நிகழ்ச்சித் திட்டம் அமுற்படுத்துவது இடம்பெற்று வருகின்றது.

| 14. | பாடசாலைகள் திட்டத்தினூடாக உள சமூகத் தலையீடு. | | 100 | மானதி மகா வித்தியாலயம், அரனாயக்க. |

## 8.3. சமூக அபிவிருத்திக் கொள்கைகள், ஆய்வுகள் மற்றும் வெளியீட்டுப் பிரிவின் நிகழ்ச்சித் திட்டங்கள்.

| தொடர் இல. | கருத்திட்டத்தின் பெயர் | பயனாளிகள் | காலப்பகுதி |
|---|---|---|---|
| 01. | செய்திக் கதிர் (News Letter) | மாணவர்கள், ஆய்வாளர்கள், கல்விசார் குழாம் மற்றும் ஏனைய உரிய தொகுதியினர் | 2016 ஜனவரி - திசம்பர் வரை |
| 02. | Sri Lanka Journal of Social Work 2016 | மாணவர்கள், ஆய்வாளர்கள், கல்விசார் குழாம் மற்றும் ஏனைய உரிய தொகுதியினர் | 2016 ஜனவரி - திசம்பர் வரை |
| 03. | வருடாந்த மரபுக் கோவை | மாணவர்கள், ஆய்வாளர்கள், கல்விசார் குழாம் மற்றும் ஏனைய உரிய தொகுதியினர் | 2016 ஜனவரி - திசம்பர் வரை |
| 04. | பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் பெண்களுக்கு நேரிடும் வன்செயல்கள், அது தொடர்பிலான பிரதிபலிப்புக்களுக்கு அலசி ஆராயும் ஆய்வு. | சகல இலங்கை வாழ் சமுதாயம் மற்றும் அகில மகளிர் சமுதாயம். | 2015 மே தொடக்கம் 2016 திசம்பர் வரை. |
| 05. | பொதுசன உதவிகளை வழங்கும்போது எதிர்பார்த்த தேவைப்பாடுகள் மற்றும் சவால்களை அடையாளங் காணும் ஆய்வு. | கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் இலங்கை வாழ் சகல பொதுமக்கள். | 2015 யூன் தொடக்கம் 2016 பெப்ரவரி வரை. |
| 06. | நவீன ரெலி நாடகக் கலைக் குடும்ப கட்டமைப்பின் மீது | தொலைக்காட்சி ஊடாக நிறுவனங்களின் | 2015 நவம்பர் - 2016 திசம்பர் வரை |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்படும் தாக்கங்கள் தொடர்பில் அலசி ஆராயும் ஆய்வு. | உத்தியோகத்தர்கள், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் கல்விசார் குழாம் மாணவர்கள் மற்றும் களத்துறையின் ஏனைய உத்தியோகத்தர்கள். | |
| 07. | தீரக சஞ்சிகை (Sri Lanka Journal of Social Development) | மாணவர்கள், ஆய்வாளர்கள், கல்விசார் குழாம் மற்றும் ஏனைய உரிய தொகுதியினர் | 2016 ஜனவரி - திசம்பர் வரை |
| 08. | தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் ஆவணத் திரைப்படமொன்றைத் தயாரித்தல். | தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம் மற்றும் ஏனைய வெளி நிறுவனங்கள். | 2016 ஜனவரி - பெப்ரவரி வரை. |
| 09. | தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் பிரதேச நிலையங்களை இலக்காகக் கொண்டு அதில் அமுறப்படுத்தப்படும் பாடநெறிகள் தொடர்பில் இடம்பெறுவதற்கு எதிர்பார்த்துள்ள தேவைப்பாடுகளை மதிப்பீடு செய்தல். | தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் கல்விசார் குழாம் பிரதேச நிலையங்களில் கற்றலைத் தொடரும் சகல மாணவ மாணவிகள். | 2016 ஜனவரி தொடக்கம் திம்பர் வரை. |
| 10. | நகர வலயத்தினுள் வாழும் பிச்சைக்காரர்கள் தொடர்பிலான ஆய்வு (மேல் மாகாணம்) | கொழும்பு நகரத்திலுள்ள பிச்சைக்காரர்கள் மற்றும் குழந்தைகள். | 2017 பெப்ரவரி |
| 11. | கிராமத்தின் வறுமையினைக் குறைப்பதற்கு சமுர்த்தி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் விளைதிறன் எவ்வாறானது என்பது தொடர்பில் அலசிப்பார்க்கும் ஆய்வு. | சகல இலங்கைச் சமுதாயம் | 2017 யூன் |
| 12. | சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சினூடாக முன்னெடுக்கப்பட்டு வரும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையங்களில் அமுறப்படுத்தப்படும் பல்வேறான வாழ்க்கைத் தொழிற் பயிற்சிப் பாடநெறிகளின் விளைதிறன் எவ்வாறு என்பது தொடர்பில் அலசி ஆராயும் ஆய்வும். | சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சினூடாக முன்னெடுக்கப்பட்டு வரும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையங்களின் நிர்வாக மற்றும் கல்விசார் ஊழியர்கள் மற்றும் அதில் கற்றலினைத் தொடரும் சகல மாணவ மாணவிகள். | 2016 ஜனவரி - திசம்பர் வரை. |
| 13. | சிறுநீரக நோயாளர்களின் குடும்பம் தொடர்பில் நலன்புரி தொடர்பிலான ஆய்வு. | அனுராதபுர மாவட்டத்தின் சிறுநீரக நோயாளர்களின் குடும்பங்கள். | 2016 ஒக்டோபர் - 2017 ஒக்டோபர் வரை. |

## 8.4.ஏனைய நிகழ்ச்சித் திட்டங்கள்

### 8.4.1. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்திற்கு உரித்தான சீதுவ கட்டிடத்தினை நிர்மாணித்தல்.

தேசிய சமூக அபிவிருத்தி நிறுகத்திற்கு நிரந்தர கட்டிடமொன்றினை நிர்மாணிப்பதற்கு சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சின் சமூக சேவைகள் திணைக்களத்திற்கு உரித்தான சீதுவவில் அமையப்பெற்ற காணியில் 2.1493 ஹெக்டயர் (5 ஏக்கர் றூட் 01 பேர்ச்சஸ் 9.08) பாகம் பெறப்பட்டுள்ளது. இதில் புதிய கட்டிடத் தொகுதியொன்றினை நிர்மாணிப்பதற்கு ரூபா மில்லியன் தொடர்பில் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டு தொடர்பில் ரூபா. 500 மில்லியன் திறைசேரி ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டிடத் தொகுதியினை நிர்மாணிக்கும் கொள்முதற் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### 8.4.2. கிளிநொச்சி பிரதேச பயிற்சி நிலையத்தினை திறந்துவைக்கும் நிகழ்வு

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற பாடநெறிகளை கிராமப்புறங்களுக்கு கொண்டு செல்லும் நோக்கில் பிரதேச பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இது வரை அனுராதபுர மாவட்டத்தின் தலாவ, அம்பாறை மாவட்டம் மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் ரண்ண ஆகிய பிரதேசங்களில் இப் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 4 வது நிலையம் 2016 ஆம் ஆண்டு கிளிநொச்சியல் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

### 8.4.3. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் பட்டம் மற்றும் டிப்ளோமாவினை வழங்கும் வைபவம்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் 2016 ஆம் ஆண்டின் பட்டம் மற்றும் டிப்ளோமா வழங்கும் வைபவம் 2016.03.20 ஆந் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்டது. இதில் சமூகப் பணி முதுமாணி பட்டதாரிகள் 11 பேருக்கும் மற்றும் சமூகப்பணி இளமாணிப் பட்டதாரிகள் 56 பேருக்கும் பட்டச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது. அதே போல உளவளத்துணை தொடர்பான 401 டிப்ளோமாதாரர்களுக்கு டிப்ளோமாச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 8.4.4. தலாவ பிரதேசப் பயிற்சி நிலையத்தினைப் பழுதுபார்த்தல்.

தலாவ பிரதேசப் பயிற்சி நிலையத்தின் பழுதுபார்த்தல் செயற்பாடுகள் இடம்பெற்று நிறைவு பெற்றுள்ளதுடன், குறுகிய கால மற்றும் நீண்டகாலப் பாடநெறிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கு மேலாக வெளி நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்குப் போதனை மண்டபங்கள் மற்றும் வதிவிட வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

### 8.4.5. நிறுவகத்தில் நிலவும் பதவி வெற்றிடங்களை நிரப்புதல்.

நிறுவனத்தில் கல்விசார் மற்றும் கல்வி சாரா உத்தயோகத்தர் குழாமின் பதவி வெற்றிடங்கள் 24 ஐ நிரப்புவது தொடர்பில் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் 2017 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடுகள் கோரப்பட்டுள்ளன.

### 8.4.6. நூலக வசதிகள்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் நூலகமானது, சுமார் 20000 மேற்பட்ட சமூகப் பணி தொடர்பான பாடநூல்களை, வெளியீடுகளை கொண்டுள்ள இலங்கையில் காணப்படுகின்ற ஒரேயொரு நூலகமாகும். இந்நூலகத்தில் காணப்படும் நூல்கள் தொடர்பான தகவல்களை கணனிமயப்படுத்தும் நடவடிக்கை வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

### 8.4.7. ஆங்கில மொழி கற்பித்தல் நிகழ்ச்சித் திட்டம்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தில் சமூகப் பணி டிப்ளோமா, உயர் டிப்ளோமா, இளமாணிப் பட்டத்தினைத் தொடரும் மாணவர்களுக்கு முறையாக ஆங்கில மொழியினை மேம்படுத்துவதற்கு வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. இளமாணிப் பட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் மாதம் முழுவதும் ஆங்கிலமொழியினை மேம்படுத்துவதற்கு பாடநெறி நடாத்தப்படுவதுடன் தகைமைகளைக் கொண்ட சிறந்த அனுபவசாலிகளான வெளிவாரி மற்றும் உள்வாரி ஆங்கில விரிவுரையாளர்கள் இதற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மாணவர்களின் கல்விப் பாடநெறிகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்குப் புத்தகங்கள் ஆராய்வதற்கும் மற்றும் ஏனைய கல்வித் தேவைப்பாடுகளுக்குமென மாணவர்களின் ஆங்கில மொழி திறனினை மேம்படுத்துதல் இந்த ஆங்கில மொழி கல்விப் பாடநெறியின் நோக்கமாகும். சமூகப் பணி டிப்ளோமா, உயர் டிப்ளோமா, இளமாணிப் பட்டத்தினைத் தொடரும் மாணவர்களுக்கு தேவையான மொழித் தேர்ச்சி மட்டவங்களைப் பெற்றுக்கொள்ளுவதற்கு இந்த ஆங்கில மொழி மூலம் கல்வி நிகழச்சித் திட்டம் பேருதவியாக அமையும்.

இந்நிறுவகமானது முறையான ஆங்கில மொழி பாடநெறிகளை பதிவு செய்யப்பட்ட சமூகப்பணி டிப்ளோமா மாணவர்களுக்கு மற்றும் சமூகப்பணி இளமாணிப் பட்டப் படிப்பு மாணவர்களுக்கும் வழங்குகின்றது. முதலாவது வருடத்திற்கான விரிவுரை வகுப்புக்கள் ஆரம்பிப்பதற்கு முன்னர், மாணவர்களுக்கான ஆரம்ப ஆங்கில மொழி (Intensive Course) தொடர்பாக விரிவுரைகள் நடாத்தப்படுகின்றது. மாணவர்களின் ஆங்கில திறனை விருத்தி செய்வதற்கும் போதுமான ஆங்கில மொழி தொடர்பான அறிவினை வழங்குவதற்கும் தகுதியானதும், திறமையானதுமான ஆங்கில போதனாசிரியர்கள் தமது சேவையை வழங்குகின்றனர். இப்பயிற்சியானது மாணவர்களின் வாசிப்புத் திறனை விருத்தி செய்வதுடன், ஆங்கில மொழியிலான இளமாணிப் பட்டப் படிப்பினை பூர்த்தி செய்வதற்கும் உதவி செய்கின்றது.

### 8.4.8. பிரதேச நிலையங்களுக்கான வாசிகசாலை வசதிகள்

நிறுவனத்தின் தலாவ, அம்பாறை, ரண்ண மற்றும் கிளிநொச்சி பிரதேச நிலையங்களுக்கான சிறு நூல் நிலையங்கள் வீதம் ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்நூல் நிலையங்கள் மற்றும் பொருட் பதிவுகள் என்பன நிறுவனத்தின் நூலகத்தினாலும் களஞ்சியப் பிரிவினாலும் மேற்கொள்ளப்படும்.

### 8.4.9. சமூக அபிவிருத்தி நிறுவகத்தினை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துடன் சேர்த்தல்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தினை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திற்கு ஒன்றுசேர்க்கும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்வருங் காலங்களில் இரண்டு நிறுவகங்களுக்கிடையில் ஏற்படுத்தப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினூடாக அச்செயற்பாடுகள் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படும்.

### 8.4.10. விசேட நிகழ்ச்சித் திட்டங்கள்

அடையாளங் காணப்படாத நாட்பட்ட சிறுநீரக நோயாளர்களின் குடும்பங்களின் நலனினை உயர்த்துவதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை அலசி ஆராய்தல்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினூடாக ஜனாதிபதி செயலகத்தின் நிதி ஒதுக்கீடுகள் மற்றும் ஒருங்கிணைப்பின் கீழ் அமுற்படுத்தப்பட்டு வரும் மேற்குறிப்பிட்ட ஆய்வு 2016.11.01 ஆந் திகதியிலிருந்து 2017.06.30 ஆந் திகதி வரை முன்னெடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ் ஆய்வு அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை ஆகிய இரு மாவட்டங்களிலுமுள்ள 10 பிரதேச செயலகங்களின் இடம்பெற்று வருகின்றது. மாதிரிக்கமைய தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகள் வருமாறு.

அனுராதபுர மாவட்டம் - மதவாச்சி, திறப்பன, ராபவ, பதவியா, கொறவப்பத்தான, இப்பலோகம, கிழக்கு நுவர கம் பளாத்த, ராஜாங்கன.
பொலன்னறுவை மாவட்டம் - மதிகிரிய, அளகெர

ஆய்வுக்கென ரூபா. 2,538,250/- நித ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2016.12.31 ஆந் திகதி வரையில் ரூபா. 159,681.33 நிதி செலவு செய்யப்பட்டுள்ளது.

**2016.10.18 ஆந் திகதியிலிருந்து 2016.12.31 ஆந் திகதி வரையான முன்னேற்றம்**

| தொடர் இலக்கம் | திகதி | செயற்பாடுகள் |
|---|---|---|
| 1. | 2016.10.18 | ஆய்வுக்கான ஆரம்பக் கலந்துரையாடல் |
| 2. | 2016.11.08/09/10 | முன்னோடி ஆய்வு<br>அனுராதபுர மாவட்டம் - பதவிய, மதவாச்சி, அனுராதபுரம், கொறவப்பத்தான, திறப்பன, இப்பலோகம, ராஜாங்கன பிரதேச செயலகப் பிரிவுகள்.<br>பொலன்னறுவை மாவட்டம் - அளகெர, மதிரிகிரிய பிரதேச செயலகங்கள். |
| 3. | 2016.11.17 | ஆய்வுக்கான வினாக்கொத்தினைத் தயாரித்தல் தொடர்பிலான ஆரம்பக் கலந்துரையாடல். |
| 4. | 2016.11.22 | ஆய்வுக்கான தரவுகளை ஒன்றுதிரட்டுதல் மற்றும் உரிய கலந்துரையாடலினை நடாத்துதல். |
| 5. | 2016.11.24 | வினாக்கொத்தினைத் தயாரித்தல் தொடர்பிலான கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளைப் பெற்றுக் கொள்ளும் முதலாவது ஆலோசனைக் குழுக் கூட்டம். |
| 6. | 2016.12.07 | ஆய்வுக்கான வினாக்கொத்து தொடர்பில் மதவாச்சிப் பிரதேச செயலகத்தின் உரிய உத்தியோகத்தர்களின் பங்குகொள்ளலுடன் விசேட கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டமை. |
| 7. | 2016.12.08/09 | வினாக்கொத்தினை முன்னாய்வுக்கு உட்படுத்துதல்.<br>பதவியா, மதவாச்சி. ராபவ, கிழக்கு நுவரகம் பளாத்த, கொறவப்பத்தான, திறப்பன, இப்பலோகம, ராஜாங்கன பிரதேச செயலகங்களை உள்ளடக்குதல். |
| 8. | 2016.12.20/21 | வினாக்கொத்தினை முன்னாய்வுக்கு உட்படுத்துதல்.<br>பொலன்னறுவை மாவட்டம் - மதிரிகிரிய மற்றும் அலகெர பிரதேச செயலகப் பிரிவுகள். |
| 9. | 2016.12.28 | ஆய்வுகளுக்கான பயிற்சி வேலைத்திட்டம் - பொலன்னறுவை மாவட்டச் செயலகம். |

# 09. இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை

## 9.1.அறிமுகம்

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை 1996 ஆம் ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டம் மற்றும் 1999 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்புச் சபை (திருத்தியமைக்கப்பட்ட) சட்டத்தினூடாக நிறுவப்பட்டுள்ளது

### 9.1.1. செயற்பாடு

1996 ஆம் ஆண்டில் சமூக சேவைகள் அமைச்சின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு அமுற்படுத்தப்பட்ட இச்சபை 2010 ஆம் ஆண்டின் மே மாதத்திலிருந்து நிதி அமைச்சின் கீழ் அமுற்படுத்தப்பட்டுள்ளது. 2015.09.21 ஆந் திகதியிலிருந்து சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சின் அமுற்படுத்தப்பட்டு வருகின்றது.

### 9.1.2. நியதிச் சட்ட நோக்கங்கள்

- சுய தொழில்களில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு அவர்களின் வயோதிபக் காலத்தில் அல்லது அவர்கள் ஏதாவது நோய்வாய்ப்படும் போது, அக்காலத்தில் அவர்களுக்கு சமூகப் பாதுகாப்பினைச் செய்து கொடுத்தல்.
- சுய தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் மரணிக்கும்போது, அவர்களில் தங்கி வாழ்வோருக்கு நிவாரணத்தினை வழங்குதல்.
- சுய தொழில்களில் ஈடுபட்டுள்ள நபர்களை உரிய தொழிற் பயிற்சிகளில் ஈடுபடும்படி வலுவூட்டுதல் மற்றும் அவர்களின் இயலுமைகள் மற்றும் திறமைகளை மேம்படுத்துதல்.
- சுய தொழில்களில் ஈடுபடும்படி இளைஞர்களை வலுவூட்டுதல் மற்றும் அவர்களின் இயலுமைகள் மற்றும் திறன்றகளை மேம்படுத்துதல்.
- கிக்கனம் மற்றும் வள முகாமைத்துவத்தின் பலாபலன்கள் தொடர்பில் சுய தொழில்களில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு விழிப்புணர்வூட்டுதல் மற்றும் அமைச்சின் சுய தொழில்களில் ஈடுபட்டு வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துதல்.

### 9.1.3. வகிபாகம்

அரசின் ஓய்வூதியம் கிடைக்காத சுய தொழில்களில் ஈடுபட்டுள்ளோர்கள், பிரத்தியேகப் பிரிவில் கடமையாற்றுவோர்கள், வெளிநாட்டுச் சேவைகளில் ஈடுபட்டுள்ளோர்கள், கலைஞர்கள் போன்ற சகல சேவைகளிலும் ஈடுபட்டுள்ளோர்களுக்கு ஓய்வூதியத் திட்டங்கள் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பயன்கள் பிரேரணைகள் திட்டம் அமுற்படுத்துவது சபையின் வகிபாகமாகும்.

### 9.1.4. ஓய்வூதிய மற்றும் சமூகப் பாதுகாப்புப் பயன்கள் பிரேரணைகள் திட்டம்

ஓய்வூதிய சம்பளத்திற்கு உள்வாங்க விரும்புபவர்களுக்கு, சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியச் சம்பளப் பயன்கள் பிரேரணைகள் திட்டத்தினை அமுற்படுத்துவதன் மூலம் அங்கத்தவர்களின் சிரேஸ்ட் பிரஜைகள் சமூகத்தினைப் பாதுகாப்பதற்கு மாதாந்த ஓய்வூதியத் திட்டம், பாதி அங்கவீனப் பயன்கள், ஒட்டு மொத்த அங்கவீனப் பயன்கள், மரணப் பணிக்கொடை போன்ற பயன்களை உறுதி செய்வதன் மூலம் அமுற்படுத்தப்படுகின்றது.

#### 9.1.4.1. உள்ளடக்கப்பட வேண்டிய சேவைக் களத்துறைகள்

சுய தொழில்களில் ஈடுபட்டுள்ளோர்கள், பிரத்தியேகப் பிரிவில் கடமையாற்றுபவர்கள், கூட்டுறவுச் சேவைகளில் ஈடுபட்டுள்ளோர்கள், வெளிநாட்டுத் தொழில்களில் ஈடுபட்டுள்ளோர்கள், அரச நியதிச் சபைகளில் கடமையாற்றுவோர்கள், கலைஞர்கள், சுதேச வைத்தியர்கள், வணக்கத்திற்குரிய பெரியார்கள், நாடோடிகள் (காட்டுவாசிகள்) போன்ற அரச ஓய்வூதியச் சம்பளங்களை பாதுகாக்கும் அவசியமான பிரிவினராக இற்றை வரையில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

#### 9.1.4.2. அமுற்படுத்தப்பட்டுள்ள முன்மொழிவுத் திட்டங்கள்.

- 1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கைச் சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கமைய, இலங்கைச் சமூகப் பாதுகாப்புச் சபையின் மிக முக்கியமான செயற்பாடு, அரச ஓய்வூதியம் உரித்தற்ற நபர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பயன்களை வழங்குவதாகும்.
- இலங்கைச் சமூகப் பாதுகாப்புச் சபையின் ஓய்வூதியச் சம்பள பிரேரணைகள் திட்டத்திற்கென வெளியிபடப்பட்ட 1464/5 என்ற இலக்க 2006 ஆம் ஆண்டின் செப்ரெம்பர் மாதம் 22 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட "பாதுகாப்பு" பிரேரணைகள் திட்டத்திற்கான வயது எல்லையாக 18 க்கும் 59 க்கும் இடையே என அனைவருக்கும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- பாதுகாப்புப் பிரேரணைகள் திட்டத்திற்கான முன்திட்டமாக 18 வயதிற்குக் குறைந்த பிள்ளைகளுக்காக பாதுகாப்பு முன்திட்ட சமூகப் பாதுகாப்புப் பயன்கள் பிரேரணைகள் திட்டம் அமுற்படுத்தப்பட்டுள்ளது.

#### 9.1.4.3. ஓய்வூதியத் திட்டத்தின் பயன்கள்

- 60 வயதிலிருந்து வாழும் காலம் வரைக்கும் ஓய்வூதியம்.
- பங்காளர் ஒரு ஓய்வூதியர் என 80 வயதினைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் மரணித்திருப்பின்
  - √ கணவன்/மனைவி உயிரோடு இருப்பின் அவன் அல்லது அவளுக்கு ஓய்வூதியரின் 80 வயது வரும் வரை ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்ள இயலும்.
  - √ வாழ்க்கைத்துணை இல்லையாயின், பங்காளிக்குப் பின்னர் உரித்துடையோருக்கு பங்காளியின் பெயரில் வைப்புச் செய்யப்பட்ட தேறிய பங்களிப்பு நிதி மற்றும் வட்டியினை மீளவும் பெற்றுக் கொள்ள முடியும்.
- நிரந்தர அரைவாசி அங்கவீன நிலைமைக்கு உட்படும் வேளையில் வயதிற்கு அமைய பொருந்தக்கூடிய பணிக்கொடை மற்றும் உத்தேசிக்கப்பட்டவாறு ஓய்வூதியத் திட்டம்.

- நிரந்தர முழுமையான அங்கவீன நிலைமைக்கு உட்படும் வேளையில் வயதிற்கு அமைய பொருந்தக்கூடிய பணிக்கொடை தேறிய பங்களிப்பு நிதியுடன் அல்லது ஒட்டு மொத்தமான அங்கவீன நிலைமைக்கு உட்பட்ட தினத்திலிருந்து வாழ்நாழ் பூராவும் வழங்கப்பட்டு வரும் மாதாந்த ஓய்வூதியச் சம்பளங்கள்.
- "ஆரஸ்ஸாவ" பிரேரணைத் திட்டத்தின் கீழ் பிள்ளைகளுக்கு 5 ஆம் வகுப்புப் புலமைப்பரிசில், க.பொ.த(சா/தரம்) மற்றும் பல்கலைக்கழக நுழைவு வரையான வேளை வரையும் விசேட பயன்களை வழங்குவது இடம்பெறுகின்றது.

### 9.1.4.4. பிரேரணைத் திட்டத்தின் அங்கத்துவத்தினைப் பெற்றுக் கொள்ளுதல்.

பிரதான அலுவலகம், சபையின் மாவட்ட அலுவலகங்கள், பிரதேச செயலகங்கள், கிராம உத்தியோகத்தர்கள், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய உத்தியோகத்தர்களூடாக அங்கத்துவத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

### 9.1.4.5. தவணைப் பணத்தினைக் கொடுப்பனவு செய்தல்.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி போன்ற வங்களின் சகல கிளைகள், தபால் அலுவலகங்கள், அதிகாரம் வழங்கப்பட்ட கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச செயலகங்கள், மாவட்டச் செயலகங்கள், சபையின் பிரதான அலுவலகத்தினூடாக கொடுப்பனவுகளைச் செய்ய முடியும்.

### 9.1.5. சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னுரிமைத் தேவைப்பாடு

2012 ஆம் ஆண்டளவில் இலங்கையில் 60 வயதினைத் தாண்டிய மக்கள் தொகையின் சதவீதம் 12.2% ஆக இருந்ததுடன், அது முதியோர் எண்ணிக்கையில் 2,468,329 ஆகும். இச்சதவீதம் 2041 ஆம் ஆண்டாகும்போது 24.9% என்றவாறு அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு சனத்தொகையில் அதிக சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முதியோர்கள், முதுமையாகும் மூத்த பிரஜைகள், பிள்ளைகள், அரசு மற்றும் பொதுவான மக்கள் சமுதாயத்திற்கு சவால் மிரட்டலொன்றாக அமையும்.

அரச கொள்கைளினுள் இது தொடர்பில் விசேட கவனத்தினைச் செலுத்தி முதியோர்களை மூத்த பிரஜைகளாக இனங்கண்டு பல சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. எதிர்கால மூத்த பிரஜைகளுக்கு ஓய்வூதியச் சம்பளங்கள் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பயன்களை உறுதிப்படுத்துவதன் மூலம் அவர்களை மிகவும் பாதுகாப்பு மற்றும் கௌரவமிக்க தொகுதியினராக்கும் தேசியப் பொறுப்பினை நிறைவு செய்வதற்கு இலங்கைச் சமூகப் பாதுகாப்புச் சபை அர்ப்பணிப்புடன் உள்ளது.

## 9.2. அமுற்படுத்தலின் முன்னேற்றம்

### ஓய்வூதியச் சம்பளங்கள் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பயன்கள் பிரேரணைகள் திட்டத்தினை அமுற்படுத்துதல்.

#### 9.2.1. அங்கத்தவர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்

| 2015.12.31 வரை மொத்தம் | | 2016.01.01 தொடக்கம் 2016.12.31 வரை | | | |
|---|---|---|---|---|---|
| எண்ணிக்கை | ஆரம்பத் தவணைப் பணம் (ரூ.மி.) | எண்ணிக்கை | ஆரம்பத் தவணைப் பணம் (ரூபா) | எண்ணிக்கை | ஆரம்பத் தவணைப் பணம் (ரூ.மி.) |
| 494,294 | 307.46 | 52,603 | 27.37 | 546,897 | 334.83 |

#### 9.2.2. பயன்களை வழங்குதல்

**ஓய்வூதியக் கொடுப்பனவு**

| 2015.12.31வரையிலான மொத்தம் | | 2016.01.01 - 2016.12.31 | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|
| எண்ணிக்கை | பெறுமதி (ரூ.மி.) | எண்ணிக்கை | பெறுமதி (ரூ.மி.) | எண்ணிக்கை | பெறுமதி (ரூ.மி.) |
| **22,629** | 826.02 | 25,263 | 238.29 | 25,263 | 1048.56 |

#### 9.2.3. பணிக்கொடைகளை வழங்குதல்

| தொடர் இல. | விபரம் | 2015.12.31வரையிலான மொத்தம் | | 2016.01.01-2016.12.31வரையிலான மொத்தம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | பெறுமதி (ரூ.மி) | எண்ணிக்கை | பெறுமதி (ரூ.மி) | எண்ணிக்கை | பெறுமதி (ரூ.மி) |
| 01 | மரணப் பணிக்கொடை | 1994 | 29.71 | 78 | 2.03 | 2022 | 31.75 |
| 02 | முழு அங்கவீனப் பணிக்கொடை | 30 | 0.88 | 02 | 0.07 | 32 | 0.96 |
| 03 | பாதி அங்கவீனப் பணிக்கொடை | 67 | 1.05 | - | - | 67 | 1.05 |
| 04 | முழு அங்கவீன மாதாந்தக் கொடுப்பனவு | 26 | 4.57 | 25 | 0.52 | 25 | 5.10 |

#### 9.2.4. நிதியம் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகள்

ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பயன்கள் பிரேரணைகள் திட்டத்தின் அங்கத்தவர்களிடமிருந்து பெறப்பட்ட தவணைப் பணம் சபையினூடாக திறைசேரி அங்கீகரித்துள்ள அரச வங்கிகளில் முதலீடு செய்யப்படும். 2016.12.31 ஆந் திகதியளவில் அதன் பெறுமதி ரூபா. 1.875 ஆகும்.

## 9.3. விசேட நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துதல்.

#### 9.3.1. சமூகப் பாதுகாப்புத் தேசிய விருது வழங்கும் வைபவம்

ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பயன்கள் பிரேரணைகள் திட்டத்தினை அமுற்படுத்தி வரும் அரச உத்தியோகத்தர்களுக்கு இலக்குகளை வழங்கி அவ்விலக்குகளை அடையச் செய்த உத்தியோகத்தர்களைப் பாராட்டுவதற்கு உரிய சுற்றுநிரூபங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இப்பாராட்டுதல் மாவட்ட மற்றும் தேசிய ரீதியில் இடம்பெற்றுள்ளது. மாவட்ட மட்டத்தில் பாராட்டுதல் நிகழ்வு நடாத்தப்பட்டிருந்தபோதிலும், 2008 ஆம் ஆண்டிலிருந்து தேசிய மட்டத்தில் பாராட்டுதல் நிகழ்வொன்று நடாத்தப்பட்டிருக்கவில்லை. அச்சமூகப் பாதுகாப்புத் தேசிய விருது வழங்கும் பாராட்டுதல் நிகழ்வு சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சர் கௌரவ திரு. எஸ்.பீ. திசானாயக்க அவர்களின் தலைமையில் 2016.07.11 ஆந் திகதி கொழும்பு தாமரைத் தடாக அரங்கில் இடம்பெற்றது. அதில் இலக்கினை எட்டச் செய்த மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் இச்சபையின் மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் உட்பட 194 உத்தியோகத்தர்களுக்கு விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 9.3.2. உள்ளக ரீதியான தொடர்பு

தென் கொரியாவில் சேவையில் ஈடுபட்டுள்ள இலங்கை ஊழியப் படையினர் தொடர்பில் ஓய்வூதியப் பிரேரணைகள் திட்டத்தினை அமுறப்படுத்துவதற்கு விசேட கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. அதற்கு நிகராக தென்கொரியாவில் சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றை அமுறப்படுத்தும் அரச நிறுவனமான தேசிய ஓய்வூதியச் சேவையுடன் (NPS) இணைந்து செயற்பட்டு வருவதுடன், அந்நிறுவனத்தின் பிரதிநிதி இச்சபைக்கு வருகை தந்து கலந்துரையாடலொன்றை முன்னெடுத்திருந்தார். மேலும் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் தென் கொரியாவில் நடாத்தப்பட்ட ஆசிய மற்றும் பசுபிக் வலயத்தின் ஓய்வூதியம் தொடர்பிலான பயிற்சிப் பாடநெறிக்கு இச்சபையின் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். அந்நிறுவனத்தின் சேவை அனுபவங்கள் மற்றும் மூலோபாயங்கள் இச்சபைக்கு முக்கியமாகையால் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றை ஏற்படுத்திக் கொள்ளுவதற்கு மேல் நடவடிக்கைகளை எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 9.4. திறைசேரி ஒதுக்கீடு மற்றும் முன்னேற்றம்

| செலவுகளின் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடு<br>ரூ.மி. | 2016.12.31 ஆந் திகதியன்று மொத்தச் செலவு<br>ரூ.மி. | சதவீதம் |
|---|---|---|---|
| மீண்டுவரும் செலவு | 107.37 | 107.30 | 99.93% |
| மூலதனச் செலவு | 7 | 4.14 | 59.13 |
| மொத்தச் செலவு | 114.37 | 111.44 | 97.44% |

# 10. ஏனைய செயற்பாடுகள்

## 10.1. அமைச்சினூடாக 2016 ஆம் ஆண்டில் அமுற்படுத்தப்பட்டுள்ள விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் அதன் முன்னேற்றம்.

- **குடும்பக் கொள்கையினை மீண்டும் தயாரித்தல்.**

2011 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட வரைவொன்றாக முன்வைக்கப்பட்ட குடும்பக் கொள்கை வெளியீட்டில் சமூகத்தில் பின்தள்ளப்பட்ட நபர்கள் தொடர்பில் மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளதால் 2011.12.15 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைய, குடும்ப அமைப்பு, பொருளாதாரம், சமூக மற்றும் ஆன்மீகம்சார் வகையில் வலுவூட்டி சமூகத்தின் அடிப்படை அலகொன்றாக வலுவூட்டுதல் தொடர்பில் மிகவும் பொருத்தமானவாறு விரிவான வரைவுடன் தயாரிக்கப்படுதல் வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் களனிப் பல்கலைக்கழகத்தின் கலாநிதி திரு. கே. கருணாதிலக அவர்களின் தலைமையில் உள்ளடக்கப்பட்ட குழு இவ் அட்டவணையினை மிகவும் விரிவாகக் காட்டி தயாரித்துள்ளது. இற்றை வரையில் குடும்பக் கொள்கை வெளியீட்டு வரைவு, மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்ட பிரதிகளின் மொழிசார் மேம்பாட்டுச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இறுதி வரைவு, தேசியக் கொள்கைத் திணைக்களத்திற்கு புலனாய்வு செய்வதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குடும்பக் கொள்கை வெளியீட்டினைத் தயாரிப்பதற்கு ரூபா. 2 மில்லியன் நிதி மதிப்பிடப்பட்டுள்ளது. இற்றை வரையில் ரூபா. 1.093 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டுள்ளது. இவ்வருடத்தில் இது தொடர்பில் ஒதுக்கீடுகள் ஒதுக்கப்படாததுடன், மேல் நடவடிக்கைகளுக்குத் தேவையான ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொள்ளுவதற்கு அடுத்த வருடத்தின் பாதீட்டு மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

- **தன்னார்வத்தொண்டர்செயலகத்தினைஅமைத்தல்.**

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு, யுன்டிபி, யுஎன்வி போன்ற நிறுவகங்களுடன் சமூக சேவைகள் அமைச்சினூடாக தன்னார்வத் தொண்டர் செயலகம் 2013 ஆம் ஆண்டில் ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யுன்டிபி யின் ஊடாகவே இதன் ஆரம்பச் செயற்பாடுகள் இடம்பெற்று வருவதுடன் அவர்கள் நேரடியாக நிதிப் பங்களிப்பினைச் செய்கின்றனர். 2014 ஆம் ஆண்டின்போது யுன்டிபி அனுசரணையின் கீழ் இச் செயலகத்தின் செயற்பாடுகள் தொடர்பில் இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் தன்னார்வச் செயற்பாடுகள் தொடர்பில் தேசியக் கொள்கை வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டின் மார்ச் மாதமளவில் யுன்டிபி கருத்திட்டம் நிறைவு பெற்றுள்ளதுடன் யுஎன்வி உத்தியோகத்தர்களினால் தன்னார்வச் செயற்பாடுகள் தொடர்பிலான செயலகம் அமைச்சின் உத்தியோகத்தர்களுக்குக் கையளிக்கப்பட்டுள்ளது.

## 10.2. அமைச்சுச் செலவுத் தலைப்பு இலக்கம் - 124 ஒதுக்கீடுகள் மற்றும் முன்னேற்றம் - (2016.12.31 ஆந் திகதி வரை)

| செலவுகளின் வகை | மதிப்பிடப்பட்ட பெறுமதி (.ரூ) | மேலதிக ஒதுக்கீடு (.ரூ) | மொத்த ஒதுக்கீட்டின் அளவு (.ரூ) | ஆம் 2016 ஆண்டின் திசம்பர் ஆந் 31 கதியளவில் தி மொத்தச் செலவு (.ரூ) |
|---|---|---|---|---|
| மீண்டுவரும் செலவுகள் | 11,764,782,000/- | 24,020,000/- | 11,788,802,000/- | 11,383,254,694/- |
| மூலதனச் செலவுகள் | 104,610,000/- | 150,820,000/- | 255,430,000/- | 238,877,766/- |
| மொத்தச் செலவுகள் | 11,869,392,000/- | 174,840,000/- | 12,044,232,000/- | 11,662,132,460/- |

## 10.3. புதிய நியமனங்கள், இளைப்பாறுதல்கள், இடமாற்றங்கள் மற்றும் பட்டதாரிகள் தொடர்பிலான தகவல்கள் - 2016.12.31 வரை

### புதிய நியமனங்கள்

சிரேஸ்ட மட்ட உத்தியோகத்தர்கள் - 01

மூன்றாம் நிலை மட்ட உத்தியோகத்தர்கள் - 01

இரண்டாம் நிலை உத்தியோகத்தர்கள் - 27

ஆரம்ப மட்ட உத்தியோகத்தர்கள் - 04

### இளைப்பாறிய உத்தியோகத்தர்கள்

நிறைவேற்றுத் தரமற்ற உத்தியோகத்தர்கள் - 05

### அமைச்சிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள்.

நிறைவேற்று உத்தியோகத்தர்கள் - 13

நிறைவேற்றுத் தரமற்ற உத்தியோகத்தர்கள் - 17

### அமைச்சுக்கு இடமாற்றம் கிடைக்கப் பெற்று வருகை தந்த உத்தியோகத்தர்கள்.

நிறைவேற்று உத்தியோகத்தர்கள் - 06

நிறைவேற்றுத் தரமற்ற உத்தியோகத்தர்கள் - 10

பதவியினைத் துறந்து சென்ற உத்தியோகத்தர்கள் - 02

சேவையிலிருந்து நிரந்தரமாக விடுவிக்கப்படுதல் - 01

மரணித்த உத்தியோகத்தர்கள் - 01

## 10.4. 2016.01.01 ஆந் திகதியிலிருந்து 2016.12.31ஆந் திகதி வரையில் தீர்மானம் வழங்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்கள்

| | அமைச்சரவை விஞ்ஞாபனம் |
|---|---|
| 01 | 2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க என்ற வாழ்வின் எழுச்சிச் சட்டத்தின் 44 (ஓ) பிரிவின் கீழ் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு உத்தியோகத்தர்களை உள்ளீர்ப்புச் செய்யும்போது நிர்வாகம்சார் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல். |
| 02 | அரசாங்க நிர்வாக சுற்றுநிரூப இலக்கம் 27/88 இன் பிரகாரம் அங்கவீனமுற்ற நபர்களுக்குத் தொழில் வழங்குதல். |
| 03 | வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தலினை திருத்தஞ் செய்தல் |
| 04 | குறைந்த வருமானப் பயனாளிகளான அங்கவீனமுற்ற நபர்களுக்கு மாதாந்தம் ரூபா. 3000/- கொடுப்பனவினை வழங்குதல். |
| 05 | றோயல் சரிட்டி பதனம (கூட்டிணைத்தல்) சட்ட வரைவு |
| 06 | உதவிப் பணிப்பாளர் (தேவைக்கு அதிகம்) பதவிகள் ஆறினை (06) உருவாக்குதல். |
| 07 | ஸ்ரீலங்கா கீறா பதனம (கூட்டிணைத்தல்) சட்ட வரைவு |
| 08 | சம்பிக்க பிரேமதாச சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்ட வரைவு |
| 09 | முதியோர்களுக்கான தேசிய சபை - 2014 வருடாந்த அறிக்கை |
| 10 | எழுபது (70) வயதினைத் தாண்டிய குறைந்த வருமானப் பயனாளிகளான மூத்த பிரஜைகளுக்கு மாதாந்தம் வழங்கப்பட்டு வரும் ரூபா. 2,000/- முதியோர் கொடுப்பனவிலிருந்து முதியோர் சமூகப் பாதுகாப்பு நிதியமொன்றை நிறுவுதல் தொடர்பில் ரூபா. 100/- நிதியினை ஒதுக்குதல். |
| 11 | தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்திற்கு உரித்தான கட்டிடத் தொகுதியொன்றை சீதுவப் பிரதேசத்தில் நிர்மாணிப்பதற்கு ஒதுக்கீடுகளை ஒதுக்கிக் கொள்ளுதல். |
| 12 | சமூக சேவைகள் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்ட வேளையில் உருவாக்கப்பட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் பதவியினை மீளவும் செயற்படச் செய்தல். |
| 13 | 70 வயதினைத் தாண்டிய குறைந்த வருமானப் பயனாளிகளான மூத்த பிரஜைகளுக்கு மாதாந்தம் வழங்கப்பட்டு வரும் ரூபா. 2000/- முதியோர் கொடுப்பனவு தொடர்பில் மேலதிக ஒதுக்கீடுகளை ஒதுக்கிக் கொள்ளுதல். |
| 14 | இரண்டாவது சமுதாய அபிவிருத்தி மற்றும் வாழ்க்கை முறைமைகளை மேம்படுத்தும் கருத்திட்டம் (கிராம எழுச்சி - கமி திரிய) அலுவலகக் குழாமினை வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு உள்ளீர்ப்புச் செய்தல். |
| 15 | நிரந்தர சேவையின் பதவியிலிருந்து தற்காலிகப் பதவிக்கு இணைப்புச் செய்ததன் கீழ் நிறைவேற்றப்பட்ட சேவைக் காலத்தினை ஓய்வூதியக் கணிப்பீட்டிற்கு உள்ளடக்குதல் மற்றும் 2014.08.08 ஆந் திகதியிலிருந்து இளைப்பாறச் செய்தல்/ திரு. ஈ.ஜே.கே. திஸ்ஸ வீரசிங்க (மத்திய தர தொழில்நுட்ப உத்தியோகத்தர் - III) |
| 16 | அறுபது (60) வயதில் ஓய்வில் செல்வதற்கு உத்தேசித்த தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகததின் மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (கல்வி) திரு. கமகே கருணாரத்ன அவர்களின் சேவையினை நீடிப்புச் செய்து கொள்ளுதல். |

| | |
|---|---|
| 17 | இலங்கைச் சமூகப் பாதுகாப்புச் சபைக்கு வாகனங்களை வழங்குதல். |
| 18 | தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம் - வருடாந்த அறிக் கை 2014 |
| 19 | முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர்களாக கடமையாற்றும் பட்டதாரிகளின் பதவியினை ஓய்வூதியத்துடன்கூடிய பதவியொன்றாக ஆக்குதல். |
| 20 | திரு. மகாமானய டி.எஸ். சேனனாயக்க அவர்களை நினைவுகூருவதற்காக ஸ்தாபிக்கப்பட்ட மீரிகம செத்செவன முதியோர் இல்லத்தினைப் புதுப்பித்தல் மற்றும் நீர்த் தாங்கியொன்றை அமைப்பதற்கு ஒதுக்கீடுகளை ஒதுக்குதல். |
| 21 | ஸ்ரீலங்கா சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டத்தினைத் திருத்தஞ் செய்தல். |
| 22 | ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பயன்கள் முன்மொழிவுத் திட்டத்தினை அமுற்படுத்தும்போது மேம்பாட்டுச் செயற்பாடுகளுக்காக நிதியத்தினைப் பெற்றுக் கொள்ளுதல் |
| 23 | சேவா லங்கா மன்றத்திற்கு உரித்தான கிழக்கு மாகாணத்தின் இலக்கம் 10, கோபாலபுரம், நிலாவெ ளி போன்ற இடத்தில் அமையப் பெற்ற வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையத்தினை வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்கள சமுர்த்தி நிதியத்தினூடாக நிதியினை வழங்கி ஒப்படைத்தல் |
| 24 | அமைச்சன் விடயப் பரப்பினை விரிவுபடுத்துதலின் கீழ் மேலதிக ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொள்ளுதல். |
| 25 | திதொர - தியேட்டர் இன்ஸ்ரிரியூட் போ டிசேபிலிட்டி றிசர்வ் அந்த அட்வொகசி (கூட்டிணைத்தல்) சட்ட வரைவு. |
| 26 | இலங்கைச் சமூகப் பாதுகாப்புச் சபை 2014 வருடாந்த அறிக்கை |
| 27 | வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் வாழ்வின் எழுச்சி நுண்நிதி வங்கித் திட்டம் தொடர்பில் வங்கிக் கட்டிடத்தினை நிர்மாணித்தல். |
| 28 | சமூக சேவைகள் திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட சைகை மொழி உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்தல். |
| 29 | 2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வாழ்வின் எழுச்சிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அலுவலகக் குழாமினை ஆட்சேரப்புச் செய்தல். |
| 30 | அங்கவீனமுற்ற நபர்களுக்கான வீடமைப்பு உதவி நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் சுப்பிரி வாசனா சம்பத லொத்தர் வருமானத்திலிருந்து கிடைக்கும் பயன்களை அதிகரித்துக் கொள்ளுதல். |
| 31. | உளவளத்துணை உதவியாளர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் (உளவளத்துணை) பதவியினை அமைச்சின் கீழ் விசேட சேவையொன்றாக நிறுவுதல். |
| 32. | வாழ்வின் எழுச்சிப் பணிப்பாளர் நாயகமாக திரு. நீல் பண்டார கசுகிந்த அவர்களை நியமித்தல். |
| 33. | வாழ்வின் எழுச்சிக் காப்புறுதி நிதியத்தினை சணச கம்பனியுடன் ஒன்றிணைத்தல். |
| 34. | 2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வாழ்வின் எழுச்சி சட்டத்தினைத் திருத்தஞ் செய்வதற்கான சட்டம். |
| 35. | 2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வாழ்வின் எழுச்சிச் சட்டத்தின் 44 (1) பிரிவின் கீழ் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதியப் பணிக்கொடை, மரணப் பணிக்கொடை, ஓய்வூதியம், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டக் கொடுப்பனவு. |
| 36. | சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சின் ஆலோசகர் பதவி தொடர்பில் |

| | |
|---|---|
| | கலாநிதி. சுனில் ஜயந்த நவரத்ன அவர்களின் சேவையினை நீடிப்புச் செய்தல். |
| 37. | வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் தொடர்பில் அலுவலகக் குழாமினை அங்கீகாரஞ் செய்துகொள்ளுதல். |
| 38. | உச்சநீதிமன்ற வழக்கின் தீர்ப்பினை அமுற்படுத்துதல் மற்றும் அது தொடர்பில் உருவாகும் ஏனைய பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குதல். |
| 39. | தெளம்புயாய வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையத்தினை விரிவுபடுத்துதல். |
| 40. | சமூக சேவைகள் திணைக்களத்தின் பதிலீட்டு அடிப்படையில் வாழ்க்கைத் தொழில் போதனாசிரியர் பதவியில் கடமையாற்றும் அங்கவீனமுற்ற நபரான திரு. குமார நந்தசிறி அவர்களை வாழ்க்கைத் தொழில் பதவிக்கு நியமனஞ் செய்தல். |
| 41. | அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்ட வரைவு. |
| 42. | நுண்நிதிய வங்கித் திட்டத்திற்கும் மற்றும் வாழ்வாதாரப் பிரிவுக்குத் தேவையான ஆலோசனையினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு தகைமையினைக் கொண்ட ஆலோசகரின் சேவையினைப் பெற்றுக் கொள்ளுதல். |
| 43. | சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சின் அரச உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கின் 124011 குறிப்பிட்ட வரையறைகளை மாற்றஞ் செய்தல். - 2016 நிதிசார் ஆண்டு. |

## 10.5. 2016.01.01 தொடக்கம் 2016.12.31 ஆந் திகதி வரையில் விசேட புலமைப் பரிசில்கள்.

| தொடர் இல. | புலமைப்பரில்/நிகழ்ச்சித் திட்டம் | சென்ற நாடு | கலந்துகொண்டோர் | காலவரையறை |
|---|---|---|---|---|
| 01 | மழை நீரினை ஒன்று சேர்த்தலும் மற்றும் தீர்வு காணலும் | இந்தியா | கௌரவ திரு. எஸ்.பி. திசானாயக்க (கௌரவ அமைச்சர்)<br><br>திருமதி. தமரா திசானாயக்க (பிரத்தியேகச் செயலாளர்) | 2016.01.09 - 2016.01.14 |
| 02 | விழிப்புலனற்றவர்களுக்கான முதலாவது இருபதுக்கு இருபது ஆசியக் கிண்ணக் கிரிக்கட் போட்டி. | இந்தியா | திரு. வை.ஜி.எ. சுமணவீர (Attendant) | 2016.01.16 - 2016.01.25 |
| 03 | உயர் உற்பத்தித் திறன் நிகழ்ச்சித் திட்டத்திற்கான உளச் சமநிலை | இந்தியா | திரு. ஏ.ஜி.எஸ். அசோக்க குமார (உதவிப் பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம். | 2016.10.20 - 2016.01.30 |
| 04 | றோயல் கருத்திட்டம் மற்றும் OTOP தளத்திற்கு விஜயம் | தாய்லாந்து | கௌரவ திரு. எஸ்.பி. திசானாயக்க (கௌரவ அமைச்சர்)<br><br>திருமதி. தமரா | 2016.02.05- 2016.02.08 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | திசானாயக்க (பிரத்தியேகச் செயலாளர்)<br><br>திருமதி. சந்ரா விக்ரமசிங்க (பணிப்பாளர் நாயகம், வாழ்வின் எழுச்சித் திணைக்களம். | |
| 05 | சமூக அபிவிருத்தி தொடர்பான குழுவின் நான்காவது தொடர் | தாய்லாந்து | திரு. எஸ்.டி உடவத்த (மேலதிகச் செயலாளர்- நிர்வாகம் மற்றும் நிதி.<br><br>திரு. டபிள்யு.டபிள்யு.பி.பி யசரத்ன (பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம்) | 2016.03.27 - 2016.04.01 |
| 06 | ஆசியா ஆசிய வலயத்தினுள் நிலைபேறான அபிவிருத்திக்காக 2030 நிகழ்ச்சி நிரலினை அமுற்படுத்தும் பிராந்திய முன்னுரிமைக்கான நிலைபேறான அபிவிருத்தி தொடர்பிலான ஆசிய பசுபிக் மகாநாடு. | தாய்லாந்து | கௌரவ திரு. எஸ்.பி. திசானாயக்க (கௌரவ அமைச்சர்)<br><br>கலாநிதி திரு. சுனில் ஜயந்த நவரத்ன (கௌரவ அமைச்சர் அவர்களின் ஆலோசகர்) | 2016.04.02 - 2016.04.06 |
| 07 | சர்வதேச உற்பத்தி ஆற்றல் ஒத்துழைப்புத் தொடர்பிலான வேலையரங்கு. | சீனா | திருமதி. ஐ.டி.என். சஞ்ஜீவனி (உதவிப் பணிப்பாளர், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம்) | 2016.04.06 - 2016.04.26 |
| 08 | முதியோர் பராமரிப்பு மற்றும் திட்டமிடல் தொடர்பிலான விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களின் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம். | ஜப்பான் | திரு. மகிந்த செநெவிரத்ன (செயலாளர்),<br><br>திரு. டபிள்யு. டபிள்யு.பி.பி. யசரத்ன (பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம்)<br><br>திரு. சுவிந்த எஸ். சிங்கப்புலி (பணிப்பாளர், முதியோர்களுக்கான தேசிய செயலகம்) | 2016.05.13 - 2016.05.22 |

| | | | | |
|---|---|---|---|---|
| 09 | அங்கவீனமுற்ற நபர்களின் களத்துறையில் கடமையாற்றும் மக்களுக்கான திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம். | கொரியா | திருமதி. ஏ.டி.எம். மதுவந்தி (சமூக அபிவிருத்தி உதவியாளர்)<br><br>திருமதி. என். செரிவ்டீன் (தவிசாளர், சுய உதவி அமைப்பு, கண்டி)<br><br>திரு. ஆர.ஜி.பி. ராஜபக்ச (மாவட்டத் தவிசாளர், சுய உதவி அமைப்பு பதுளை)<br><br>திருமதி. பீ. ராமநாயக்க, பொருளாளர், DOJF)<br><br>திரு. டபிள்யு.எம்.பி.கே. விக்ரமசிங்க, (செயலாளர், இலங்கை விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நிதியம்) | 2016.08.23 - 2016.09.04 |
| 10 | ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் சமூக அபிவிருத்தி மற்றும் மனித பயிற்றுவித்தல் சேவைகள் தொடர்பில் எழும் சவால்கள். | இந்தோனேசியா | திரு. நிட்லி ஜயசிங்க (பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம்)<br><br>திருமதி. எம்.ரி.ஆர்.எஸ். அத்தநாயக்க (பணிப்பாளர், சமூக சேவைகள் கல்லூரி) | 2016.06.17- 2016.06.20 |
| 11 | ஆசிய பசுபிக் அரச சேவை ஓய்வூதியம் தொடர்பிலான பயிற்சிப் பாடநெறி | கொரியா | திரு. பாக்கியராஜா பிரதீபன் (ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர், இலங்கைச் சமூகப் பாதுகாப்புச் சபை) | 2016.05.28 - 2016.06.05 |
| 12 | கிராமப் பிரதேசங்களிலுள்ள பெண்களூடாக குறைந்த வருமானத்தினைக் கொண்ட குடும்பங்களை வலுவூட்டுதல். | கொரியா | திரு. கே.எ.எல். சிறில் (பணிப்பாளர், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம்)<br><br>திரு. ஏ.எம்.எஸ். அத்தபத்து (பயிற்சி மற்றும் ஆய்வு உத்தியோகத்தர், கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு | 2016.06.02 - 2016.06.17 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நிறுவகம்) | |
| 13 | அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் தொடர்பில் திறன் விருத்தி வேலையரங்கு | சீனா | திரு. அய்.சீ.ஜெ. குணவர்தன (உதவிப் பணிப்பாளர், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம்) | 2016.05.27 - 2016.06.18 |
| 14 | இந்தியாவுக்கான விஜயம் | இந்தியா | திரு. எம்.எம். அப்துல்லா (சமூக சேவைகள் உத்தியோகத்தர்)<br><br>திரு. எம். குகதாசன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்)<br><br>திரு. எவ்.எம். பர்மி (அபிவிருத்தி உத்தியோகத்தர்) | 2016.06.11 - 2016.06.18 |
| 15 | உன்னத செயற்பாட்டு விருது 2016 - அதிர்ச்சி மற்றும் திடீர் விபத்துக்கள் சிகிச்சை II வது நிகழ்ச்சித் திட்டம். | நேபாளம் | திரு. சுசந்த விஜயகுமார (உளவளத்துணை உதவியாளர்) | 2016.08.01 - 2016.08.13 |
| 16 | நேர்க்கணிய நடத்தைக்கு உதவுதல் தொடர்பில் முதலாவது ஆசிய பசுபிக் சர்வதேச மகாநாடு | தாய்வான் | திருமதி. ஜி.எல்.எல். குணசிங்க (சமூக நலன்புரி அத்தியட்சகர்) | 2016.06.20 - 2016.06.29 |
| 17 | முதியோர் சனத்தொகை தொடர்பில் பிராந்திய வல்லுனர் கருத்து | தாய்லாந்து | திரு. சுவிந்த எஸ். சிங்கப்புலி (பணிப்பாளர், முதியோர்களுக்கான தேசிய செயலகம்) | 2016.07.11 - 2016.07.15 |
| 18 | 2016 அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் தொடர்பில் கிராமிய அபிவிருத்தி மற்றும் வறுமையினைத் தணிக்கும் வேலையரங்கு | சீனா | திருமதி. புஸ்பா நிஸ்சங்க (பணிப்பாளர், கிராமிய அபிவிருத்திப் பிரிவு) | 2016.07.09 - 2016.07.30 |
| 19 | சமூகப் பணிகளில் ஈடுபடும் மக்களுக்கான வேலையரங்கு மற்றும் நிகழ்ச்சித் திட்டம் | ஜப்பான் | கௌரவ திரு. ரஞ்சன் ராமநாயக்க (கௌரவ பிரதியமைச்சர்)<br><br>திரு. வோல்டர் விஜயானந்த ராஜபக்ச (சமூக சேவைகள் | 2016.10.19- 2016.10.26 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | உத்தியோகத்தர்). திருமதி. கயனி பாலசூரிய (செயலாளரின் ஒருங்கிணைப்புச் செயலாளர்)<br><br>திருமதி. டபிள்யு.எம்.பி. குமாரி (வாழ்வின் எழுச்சி முகாமையாளர்)<br><br>திரு. பவத் நிசாந்த (வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்) | |
| 20 | கெல்ப்பேஜ் ஆசியா பசுபிக் மகாநாடு | வியட்நாம் | கௌரவ திரு. எஸ்.பி. திசானாயக்க (கௌரவ அமைச்சர்)<br><br>திருமதி. தமரா திசானாயக்க (பிரத்தியேகச் செயலாளர்)<br><br>திரு. சுவிந்த எஸ். சிங்கப்புலி (பணிப்பாளர், முதியோர்களுக்கான தேசிய செயலகம்) | 2016.09.06 - 2016.09.08 |
| 21 | பொருளாதார அபிவிருத்தி மற்றும் நிதி முகாமை தொடர்பிலான வேலையரங்கு | சீனா | திருமதி. எஸ்.எஸ். நுராமித் (பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்) | 2016.08.17 - 2016.09.19 |
| 22 | டாட்டா தொழிற்சாலைக்கான சுற்றுலா | இந்தியா | திரு. எஸ்.டி. உடவத்த, மேலதிகச் செயலாளர் (நிர்வாகம் மற்றும் நிதி)<br><br>திருமதி சந்ரா விக்ரமசிங்க (பணிப்பாளர் நாயகம், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம்)<br><br>திரு. அனுர விரரத்ன (பணிப்பாளர், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் | 2016.09.19 - 2016.09.22 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | திணைக்களம்) | |
| 23 | 15 வது ஆசிய முதுகு வளைவு (Spinal Cord) பின்னலமைப்பு | இந்தோனேசியா | திருமதி. ராதா நானாயக்கரா (மேலதிகப் பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம்)<br><br>திரு. டபிள்யு.எம். வீரக்கோன் (சமூக சேவைகள் உத்தியோகத்தர்)<br><br>திருமதி. இந்திக்கா பிரேமசிறி (சமூக அபிவிருத்தி உதவியாளர்)<br><br>திரு. தம்மிக்க வாசல பண்டார (சமூக சேவைகள் உத்தியோகத்தர்)<br><br>திரு. பிரியங்கர பண்டார (சமூக அபிவிருத்தி உதவியாளர்) | 2016.10.26 - 2016.10.30 |
| 24 | நோய்நொடியற்ற முதுமை தொடர்பிலான பிராந்தியக் கூட்டம் | ஜப்பான் | திருமதி நயனா சிங்கப்புலி (உதவிப் பணிப்பாளர், முதியோர்களுக்கான தேசிய செயலகம்) | 2016.10.26 - 2016.10.28 |
| 25 | உலகளாவிய நட்பு<br><br>அங்கவீனக் கொள்கைகள்<br><br>திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் | தாய்லாந்து | திரு. ஏ.ஜி.எஸ். அசோக்க குமார (பிரதிப் பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம்)<br><br>செல்வி. கல்பனா இரங்கநாதன் (அபிவிருத்தி உதவியாளர்) | 2016.10.23 - 2016.11.12 |

### 10.6. 2016.01.01 தொடக்கம் 2016.12.31 வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற உள்ளூர்ப் பயிற்சிப் பாடநெறிகள்.

| தொடர் இல. | பயிற்சிப் பாடநெறி | பங்குபற்றியோர் தொகை |
|---|---|---|
| 01 | பிரத்தியேகக் கோவைகள் | 02 |
| 02 | கொள்முதலினைத் திட்டமிடுதல் மற்றும் விலைமனு ஆவணங்களைத் தயாரித்தல். | 01 |
| 03 | மய்க்றோ சொவ்ட் அட்வான்ஸ் பாடநெறி | 01 |
| 04 | செய்முறைத் தரவுகளைத் திட்டமிடுதல் | 02 |
| 05 | கொள்முதல் செயற்பாட்டிற்குரிய ஆவணங்களைத் தயாரித்தல் | 70 |
| 06 | கொள்முதல் செயற்பாட்டில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் கடமைப் பொறுப்பு | 70 |
| 07 | பிரத்தியேக ஆவணங்களை முன்னெடுத்தல் | 70 |
| 08 | சம்பளத் திருத்தம் | 65 |
| 09 | உளப்பாங்கு மேம்பாடு தொடர்பிலான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம் | 110 |
| 10 | CIGAS கணனிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 08 |
| 11 | திரண்ட அடிப்படையின் கீழ் கணக்குக் கூற்றினைத் தயாரித்தல். | 42 |
| 12 | Pay Roll கணனிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 11 |
| 13 | அலுவலகப் பணியாளர்களுக்கான விசேடப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 29 |
| 14 | சிறாப்பர் நிதியினை அறிவீடு செய்யும் பதவியின் கடமைப் பொறுப்பு | 01 |
| 15 | "நான் சென்று வருகிறேன்" வீதிப் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம் | 45 |

### 10.7. 2016.01.01 ஆந் திகதி தொடக்கம் 2016.12.31 ஆந் திகதி வரையில் இடம்பெற்ற வரியினைத் தளர்த்துவதற்கான பரிந்துரைகள்.

| தொடர் இல. | நிறுவகத்தின் பெயர் | நன்கொடை வழங்கிய நாடு | நன்கொடையளிக்கப்பட்ட பொருட்கள் |
|---|---|---|---|
| 01 | சரண குடும்ப அபிவிருத்தி அலகு | சுவீடன் | மனித தேவைப் பொருட்கள் |
| 02 | கொழும்பு பிரண்ட் சொசைட்டி | இந்தியா | செயற்கைக் கால்கள் |

| | | | |
|---|---|---|---|
| | | | செய்வதற்கான மூலப் பொருட்கள்/ |
| 03 | ரன்முத்துக்கல மகா விகாரை | ஜப்பான் | பயன்படுத்தப்பட்ட சக்கர நாற்காலிகள் |
| 04. | யாழ்ப்பாணம் ஜயப்பூர் புனர்வாழ்வு நிலையம் | சுவிசர்லாந்து | செயற்கைக் கால்கள் செய்வதற்கான மூலப் பொருட்கள்/ |
| 05. | சிங்க ரய்ரஸ் விஜேரத்ன | பின்லாந்து | உபயோகிக்கப்பட்ட மூக்குக் கண்ணாடிகள் |
| 06. | செயலாளர், சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு | சிங்கப்பூர் | மனித தேவைப் பொருட்கள் |
| 07. | திரு. கௌரவ புத்திக்க பத்தரண | ஐக்கிய அமெரிக்கா | மனித தேவைப் பொருட்கள் |
| 08. | திரு. கௌரவ புத்திக்க பத்தரண | ஐக்கிய அமெரிக்கா | மனித தேவைப் பொருட்கள் |
| 09. | மகாகருண பௌத்த சங்கம் | சிங்கப்பூர் | மனித தேவைப் பொருட்கள் |
| 10. | கொழும்பு மித்துறு சங்கம் | இந்தியா | மனித தேவைப் பொருட்கள் |